மாரா = மன்மதனே என்னும் பொருளில்வரும் விளி.

மோரா = முகராத, பாதப்படி, ஒருவித தங்க நாணயம்.

வரா = வராத, எதிர்மறை அஃறிணைப் பன்மை வினைமுற்று, ஒரு வினையெச்சம்.

வாரா = "வரா" பார்க்க.

வீரா = வீரனே என்னும் விளி.

வேரா = வேராவென்னும் வினா.

அரி = தீ, ஐமை, ஒளி, ஓம், கள், கிளி, சோலை, தேர், நெல், பசை, பறை, புகை, பொன், மலை, மாலை, வரி, வலி, விசி, அரிசி, அழகு, கடல், காற்று, கிள்ளை, குதிரை, கூர்மை, சில்லு, சிவன், தவளை, நமன், நிறம், பச்சை, பன்றி, பாம்பு, மென்மை, வடிவு, வண்டு,

விஷ்ணு, வெற்றி, அடர்பு, இயமன், ஈ, வாள், உட்டொளை, கட்டில், கண்வரி, கிரணம், குற்றம், குரங்கு, கொடுவேலி, சத்துரு, சிங்கம், சிலம்பு, சீதரன், சூரியன், திருமால், நித்திரை, நெருப்பு, பகவன், படுக்கை, மூங்கில், வரதன், விட்டுணு, அரித்தல், அரிப்பிடி, அனந்தன், இந்திரன், ஐமைவடிவு, சக்கரம், சந்திரன், நெருக்கம், நெற்கதிர், மகாவிஷ்ணு, 'மரகதம், அபாரசிதன், ஆயுதப்பொது, சிங்கவிராசி, தேவேந்திரன், பச்சைநிறம், மரவயிரம், மழைத்தூவல், அரியென்னேவல், கட்டிலின் விசி, தகட்டு வடிவு, அறவாழியந்தணன், உட்டுளைப்

பொருள், உலகங்காத்தான், சதங்கையின் பருக்கைக்கல், செம்மறியாட்டுக் கடா, சிலம்பின் பருக்கைக்கல், நவகண்டத்தொன்று.

ஆரி = மாலை, சோழன், மேன்மை, துர்க்கை, பார்வதி, பார்ப்பனி.

ஈரி = கந்தை, கந்தற்புடவை, கொக்கான் விளையாட்டி லிவ் விரண்டாகப் பிரிக்குந் தன்மை, ஏழாங்காய் விளையாட்டின் ஒருறுப்பு, பலாக்காய்த் தும்பு.

உரி = உரிய, உரிமை, தோல்,

அடுக்கு, அரைப்படி, உரிச்சொல், உரியென்னேவல், கொத்துமல்லி, மரப்பட்டை, ஓர்வகையளவு.

ஊரி = தூரி, இளமை, சங்கு, மேகம், ஓர்விதப் பூண்டு.

எரி = தீ, கேட்டை, பரணி, பிரபை, கந்தம், நரகம், நெருப்பு, கேட்டைநாள், அழல், பிரகாசி, புண்முதலிய வெரி, பொருமைகொள், கோபங்கொள், வயிறெரி, பிரகாசம், புநர்பூசம், புனர்பூசம், எரியென்னேவல், நெல்லிக்காய் கந்தகம்.

ஏரி = இமில், குளம், உடைகுளம், சலாதாரம், தடா



கம், சலஸ்தானம், புநர்பூசம், புனர்பூசம், புநர்பூசநாள், இடபத்தின் முரிப்பு.

ஓரி = ஆண் நரி, ஆண்முசு, கிழநரி, ஆண்மயிர், ஒல்லட்டை, புறமயிர், விலங்கின் படுக்கை, விலங்கின் ஆண் பொது, காளிவாகனம், கடையெழுவள்ளல்களில் ஒருவன்.

கரி = சாக்ஷி, யானை, இந்து, கருமை, சாட்சி, நஞ்சு, மிளகு, வைரம், அலா



தம், இருந்தை, கந்துள், காலிகம், கோகிலம், நீமலம், மிச்சில், வயிரம், அங்காரம், இங்காலம், திருட்டாந்தம், கரியென்னேவல், நெருப்புக்கரி, தெரிநிலை வினைப்பகுதி, துரோணமைந்துகூடினது, மரத்தின் வைரப்பாகம்.

காரி = ஆவிரை, இந்திரன், கிளி, களர்நிலம், கறுப்பு, கரிக்குருவி, காக்கை, சனி, நஞ்சு, ஐயனார், வயிரவன், தொழில் செய்யிடம், ஆவிரைச்செடி.

கிரி = மலை, பன்றி, இலக்கினம், பிணையாளி, மருட்பன்றி.

கீரி = ஊமை, கள்ளி, காகம். தீர்வை, மூங்கா, அகிரிபு, அராவைரி, ஓர்பூடு, காத்தரி, கோடிரம், கோடீரம், நகு

லம், அகிபுக்கு, அங்கூடம், ஓர்மரம், காத்திரம், சர்ப்பாரி, பிங்கலம், பிலேசயம், கள்ளி மரம், சர்ப்பாராதி, மகிந்தகம்.

கோரி = வேண்டி, கிடங்கு, சித்தியம், பிரேதக்குழி, கல்லறை, சூதி, பிரேதக் குழியின்மேல் கட்டிய கட்டடம், பிரேதகிரகம், பிதிர் மந்திரம், ஒரு வினையெச்சம்.

கௌரி = காளி, பூமி, கடுகு, துளசி, பூகம், ஒரு நதி, துர்க்கை, பார்வதி, மஞ்சுவாணி, மஞ்சள் நிறம், வருணன் பாரி, பத்தாண்டுப் பெண், புளிநறளைச்செடி, எட்டுவயதுடையவள்.

சரி = நேர், பசு, வழி, ஒப்பு, கைவளை, சமம், சமன், நயம், ஒழுங்கு, கூட்டம், திட்டம், நிதானம், நியாயம், ஒரு தன்மை, சமத்தம், சமஸ்தம், பிசகின்மை, மலைச்சாரல், சரியென்னேவல், சம்மதிக் குறிப்பு.

சாரி = சிலை, நாய், ஜாரி, திரும்பல், நடை, உலாவல், வாகன மீது செல்கை, பக்கம், வட்ட மாயோடல், சுழல்காற்று, தடவை, உலாப்போதல், சூரைக்காற்று, சூதாடுங் கருவி, யானைமேற்றவிசு, அஞ்சனபாஷாணம், பரதவுறுப்பு ளொன்று, அரசர்க்குச் செங்கோல் செல்லல்.

சிரி = வாள், அம்பு, சிரிப்பு, கொலைசெய்வோன், வெட்டுக் கிளி, சிரியென்னேவல், தெரிநிலை வினைப்பகுதி.

சீரி = முக்காடு, பலதேவன், புளியமரம்.

சுரி = சேறு, தேவி, புரி, ஆண் நரி, தமர், சுழற்சி, முறுக்கு, எட்டுத்தொளை, சங்குச்சுரி, சுரியென்னேவல், நெற்றிச்சுட்டி.

சூரி = காளி, வீரி, எருக்கு, காடுகாள், சூரியன், புலவன், கிருஷ்ணன், பண்டிதன், புத்தகுரு, நத்தைச்சூரி, புளிச்சகீரை, வீரமுள்ளவன், மடக்குக்கத்தி, ஜைனநூலாசிரியர் மேற்கொள்ளும் பட்டப் பெயர்.

சேரி = ஊர், தெரு, பாடி, முறி, வாடை, வேணி, பாடம், சிரேணி.

சோரி = மழை, இரத்தம், சிறு செருப்படை.

சௌரி = சனி, சநி, நமன், கருடன், கன்னன், காளிந்தி, திருமால், துர்க்கை, கிருஷ்ணன், தாருகன் மனைவி.

தரி = தரிப்பு, தரியென்னேவல்.

தாரி=வழி, குணம், விதம், உடையோன், விலைவாசி, அரிதாரம், தரிப்பவன்.

திரி = பெண், மூன்று, வத்தி, ஸ்திரி, திரிசிலை, திரிதல், தைலமாலி, காரத்திரி, மெழுகுதிரி, திரியென்னேவல், விளக்குத்திரி, வெள்ளைப்பூண்டு, வெடிக்குழாய்த்திரி.

துரி = எழுதுகோல், நூற்பாத்திருத்தும் படைமயிர்.

தூரி = ஊரி, வலை, ஊசல், எருது, தூரிகை, ஊஞ்சல், பலகறை, பெருவலை, எழுதுகோல், தூரிக்கோல், உமரிக்காசு, தூரிகைக்கோல், தூரியைக்கோல், ஒருவாத்தியம்.

தேரி = மணற்றிட்டை.

தோரி = சோறு.

நரி = ஓரி, சிவை, சுரி, ஊளன், ஊளான், கோணாய், கோமாயு, சம்பு, சிவாலு, இகலன், உள்ளன், ஒண்டன், கைரியம், நக்கன், பூரிமாயு, பேரவம், மிருகாரி, விருகம், ஓரோட்டம், கடகாதகர், குரோட்டம், ஞரோட்டம், ஜம்புகம், சம்பகம், சம்புகம், சம்பூகம், சிறுகாலன், தந்திரமா, பிராமகம், பேரண்டம், பேருந்தம், மிருகாரதி, வஞ்சகன், வனச்சுவை, விருகாராதி, கடகாதகன், கோரராசனம், சாலாவிருகம், மிருககாந்தம், மிருதமத்தம், மிருகதூர்த்தகன், மிருகமார்த்தகம், வியாக்கிரநாயகன்.

நாரி = இடை, கள், சேனை, தேன், நாணி, பெண், வாசனை, ஒருபண், நன்னாரி, பன்னாடை, பார்வதி, யாழ்நரம்பு.

நெரி = புரி, நெரிவு, புடைவை, மடிப்பு, முரிப்பு, நெரியென்னேவல்.

நேரி=சோழ தேயத்தோர் மலை.



பரி = சுமை, வழி, அன்பு, உண்மை, கருமை, குதிரை, செலவு, பங்கு, பெருமை, மாயம், மிகுதி, முடிவு, விரிவு, விரைவு, அசுபதி, அச்சுவினி, உயரம், கறுப்பு, செல்வம், துக்கம், துன்பம், பருத்தி, விசாலம், அடையாளம், உயர்ச்சி, பரப்புதல், குதிரைநடை, சீக்கிரம், சுமத்தல், நெருக்கிடை, பாதுகாப்பு, வணக்கம், வருத்தம், அலங்

காரம், காழ்த்தல், பாதுகாத்தல், பரியென்னேவல், உள்ளக்களிப்பு.

பாரி = பூமி, மனைவி, ஓரளவு, கட்டில், கோட்டம், சிங்கம், நல்லாடை, சிறங்கைநீர்,



பருத்தது, ஓர் மிருகம், பூந்தாது, பெரியோன், இராக்காவல், பாரியென்னேவல், யானைகட்டுங்கயிறு, கள்குடிக்கும் பாத்திரம், கடையெழுவள்ளலி லொருவன்.

பிரி = பிரிவு, வெருகு, பிரியென்னேவல்.

புரி=ஆசை, ஊர், சுரி, நெரி, யாறு, சட்டு, கயிறு, கோட்டை, சங்கு, சுருள், புரம், மிகுதி, அரசன், செய்தல், முறுக்கு, இராசதாநி, இராசதானி, இராஜதானி, பட்டினம், முறுக்குதல், வைக்கோற்புரி, கயிற்றுப்புரி, புரியென்னேவல், மருத நிலத்தூர்.

பூரி = ஞானி, ஒரெண், பொன், கோடி, ஓரிசை, சிவன், பகல், பரிசு, மிகுதி, குற்றம்,

கோடாகோடி, திருமால், நூறுகோடி, பிரமன், ஓர்வீரன், கலப்புநெல், சோமசேகரன், ஓர்பணிகாரம், புல், பூரியென்னேவல், சிரார்த்த கிரியையி னொன்று, சோமதத்தன் மூத்த மகன்.

பேரி = பேரிகை, முரசு, பறைப்பொது.

பைரி = வைரி, சத்துரு.

பொரி = கரிக்காடு, யானைக்காடு, பொரியென்னேவல், நெற்பொரி முதலியன.

போரி = எதிரி, ஒத்ததரம், திருப்போரூர்.

மாரி = கள், நீர், கொலை, சாவு, நீர், மழை, அழிவு, உவாதி, காலம், மேகம், காடுகாள், ஒட்டுநோய், மாரிகாலம், கொள்ளைநோய்.

முரி=பாலைநிலம், முரியென்னேவல்.

மூரி = வலி, எருது, எருமை, முரண், நெரிவு, பழமை, பெருமை, சோம்பல், எருத்துத்திமில்.

யாரி = எதிரி, கதவு.

வரி = இசை, கீறல், கோடு, நிரை, நெல், மாலை, வரை, வலி, வழி, கடல், கடன்,



கீற்று, தேமல், நிறம், நீளம், பன்னு, புகர், வத்தி, புள்ளி, வடிவு, வண்டு, அக்கினி, எழுத்து, கல்வரி, குடியிறை, விரலிறை, சங்குவரி,

சந்தித்தெரு, இசைப்பாட்டு, வரியென்னேவல், விரல் முதலியவற்றின் இரேகை.

வாரி = நீர், மடை, வழி, கடல், கதவு, சீப்பு, மதில், மிகுதி, வாயில், விளைவு, தானியம், நிறைநீர், நிறைபுனல், வெள்ளம், இசைக்குழல், சரசுவதி, மதிற்சுற்று, யானைக்கொட்டம், யானைபடுகுழி, வாரியென்னேவல், யானை கட்டுங் கயிறு, யானை படுக்குமிடம்.

விரி = விரியென்னேவல், பொதியெருதின் மேலிடும் சேணம்.

வீரி = காளி, துர்க்கை, வீரமுடையவள், வட்டத்திருப்பி.

வேரி = கள், கந்தம், வாசனை, வெட்டிவேர்.

வைரி = சத்துரு, பைரி.

பேரீ = மாட்டீ.

மாரீ = மாரகம், மாய்மாலம்.

அரு = அணு, மாயை, அறிவு, காயம், கடவுள், உருவமற்றது.

ஆரு = குடம், நண்டு, பன்றி, கரகம்.

இரு = இரண்டு என்பதின் திரிபு, பெரிய, அதிதிதியின் நாமாந்திரம்.

உரு = உள், கரு, கலை, நோய், அட்டை, அழகு, உடல், கோபம், நிறம், பதுமை, பருமை, வடிவு, தோற்றம், வெப்பம், அதிகமான, எலுமிச்சை, விக்கிரகம், கப்பல், உருப்படி, வியாதி, நீண்ட, விலையுயர்ந்த, சன்னதம், செபத்தினுரு, வைக்கோற்புரி, விலையுயர்ந்தது, பெரிய மரக்கலம், உருத்தலைச் செய்யென்னேவல்.

ஊரு = தொடை, அச்சம், அட்டை.

எரு = சாணி, வயலுக்கிடுமெரு.

ஒரு = ஒன்று என்பதின் [திரிபு.

கரு = சினை, சுனை, சூல், நடு, மேடு, வயா, காரணம், நிறம், பிள்ளை, பிறவி, பெருமை, கருத்து, வித்தின் கரு, முட்டை, மென்மை, யோசனை, கருப்பம், கருநிறம், முட்டைக்கரு, கம்மியர் கட்டுங் கரு, சுக்கிலம், கருப்பொருள், ஆயுதத்தின் பல், உட்பொருள், அட்டகருமக் கரு.

காரு = செய்வோன்.

குரு = ஐ, சாமி, கோபி, பதி, சோறு, பரு, பிதா, அத்தை, ஆசாரி, ஆசான், ஆதன், ஈசன், ஐயன், கனம், கோமான்,

சிவன், சுவாமி, துரிசி, துருசு, நாதன், நிறம், பாரம், பெருமை, மரம், மேன்மை, வகுரி, திவ்வியம், அடிகள்,

அத்தன், ஆண்கோள், ஆத்தன், ஆரியன், இரசம், இரதம், இறைவன், உவாத்தி, கடவுள், குரவர், குருபூமி, தலைவன், தேசிகன், பகவன், புதானன், பூசநாள், பெருமான், வியாழம், வியாழன், ஆசிரியர், ஆசிரியன், ஒருசந்தம், ஓர்தேசம், ஓர்வியாதி, காத்திரம், குரு வியாதி, தீக்கையோன், தீர்த்தன், பண்ணவன், பிரகாசம், புங்கவன், ருசிதரன், வருத்தம், விநாயகன், வேர்க்குரு, இருமாத்திரை, குருவருடம், சுத்தசலம், பட்டாரகன், அங்கிதரன் புதல்வரிலொருவன், உலோகங்களை வேதிக்குஞ் சிந்தூரமுதலியன, குருகுலவம்சத்து முதல் அரசன், நிமிடமறுபத்துநான்கு கொண்டது, பலண்டுருக பாஷாணம், தருமோபதேசகன்.

சரு = சோறு, தேவருணவு, பிதிரர் உணவு.

சாரு=கிளி, அழகு, கிள்ளை, சாருவரன், புமநசியன் புத்திரன்

சிரு = போதல், தோட்பொருத்து.

செரு = போர், சண்டை, யுத்தம்.

சேரு = கூடு, நெருங்கு.

சௌரு = சுவர், நெய்ப் பற்றுள்ள சுவை.

தரு = மரம், ஒருசந்தம், தேவதாரம், ஒருவகைச் சுதிப்பிரமாணம், ஒரு உவமையுருபு, கூத்து முதலியவற்றில் பாடுமிசை.

தாரு = தேவதாரு, பித்தளை, மரப்பொது, மரக்கொம்பு.

திரு = ஸ்ரீ, அழகு, மேன்மை, செல்வம், இலக்குமி, தெய்விகம், தெய்வீகம், மங்கல மொழியினொன்று.

துரு = கறை, பொன், கறள், உபாயம், களிம்பு, இருப்புக்கறை.

தூரு = அடி.

தேரு = கோசு, சேரி, சேனை, வழி, வாடை,



வீதி, கோசம், சிருதி, சிறகு, பதம், மறுகு, வாடகை, விச்சை, வீசிகை, ஆவணம், ஒலியல், நியமம், ஞெள்ளல், பாடகம், விவதம், கோத்திரம்,

பிரபாதம், மார்க்கம், உபநிஷ குரம்.

நரு = நொரு, முளியில் முளைக்கு மட்டம்.

நொரு = நரு, நொருவல், பயிரினடியில் முளைப்பது, காய்ப்பு மாறினபின் அரும்பும் பிஞ்சு.

பரு = கணு, குரு, மலை, கண்டு, கடல், கட்டி, சினம், பருவு, பருமை, குருப்பு, சிலந்தி, சினப்பு, மோக்கம், சிலந்திநோய், சிலந்திப்புண், பருவென்னேவல்.

பாரு = தீ, சூரியன்.

பிரு = கத்திரி.

பீரு = புலி, புருவம், வெள்ளாடு, அச்சமுள்ளோன்.

புரு = ஓரரசன், குழந்தை, மோட்சம், ஒருதைத்தியன்.

பேரு = தீ, சூரியன், பொன் மலை, சமுத்திரம்.

மரு = மலை, வனம், வாசனை, வனுந்திரம், ஒரு பரிமளப் புல்.

மிரு = பாலைநிலம்.

மேரு = மலை, நாராசம், பொன்மலை, மேருமலை, விபுலன், ஆசனபீடம், சுராலயம், கன்னிகாசலம், ஓர்வகைக் குப்பி, தேரின்மேலாசனம்.

நேரே = குத்தென, செஞ்செவ்வே.

அரை = இடை, கடி, நடு, பாதி, வயிறு, கப்படா, தங்கான், கடிதடம், அரையென்னேவல், மர முதலியவற்றினடி, உடம்பின் நடுவிடம், ஒரு மரம்.

ஆரை = மதில், ஒருபூடு, நீராரை, புற்பாய்.

இரை = ஊண், ஒலி, நீர், பூமி, உணவு, உண்டி, பேச்சு, வீங்கு, இருப்பு, உண்டது, பட்சணை, இலக்குமி, தூண்டி விரை, பட்சணம், பறவை யுணவு, இரையென்னேவல்.

உரை=உறை, ஒலி, சொல், பாழி, பொன், மொழி, விடை, துணிவு, தேய்வு, பேச்சு, சொல்லல், பாடியம், பாஷியம், தேய், மாற்றறியவுரை, பேசு, வேதமொழி, உயர்ச்சி, சொற்பயன், சொற்பொருள், தேய்மானம், எழுத்தினொலி, உரையென்னேவல், வியாக்கியானம், ஆசிரியவசனம்.

ஓரை = இராசி, கூகை, தோழி, சமயம், மூர்த்தம், விளையாட்டு, இராசிப்பொது, இலக்கினம், சித்திரான்னம், மகளிர் கூட்டம், மாதர் கூட்டம், ஐந்துநாழிகை நேரம், மாதர்விளையாடுங்களம், மாதர் விளையாடுங்கருவிகள்.

கரை=சீமை, சொல், பாகு,

வரை, வேலை, அருகு, அழகு, எல்லை, கங்கு, கானல், கூலம், சேயம், சேர்வு, தடம், தீரம், பாரம், முடிவு, பாடகம், மரியாதை, விளிம்பு, வார்த்தை, சம்பளம், தடத்தம், தடஸ்தம், நிதம்பம், நீர்க்கரை, பாராவாரம், பிரதீரம், பிரபாதம், கரையென்னேவல், வயல்வரம்பு, சீலையின்விளிம்பு கடல் முதலியவற்றின் கரை.

காரை = சீலை, ஒருசெடி, ஒருமீன், ஒருமரம், சுண்ணச் சாந்து.

கீரை=சாகம், மரத்தோல், இலைக்கறிப்பொது.

குரை = ஒலி, குதிரை, குளம்பு, ஆரவாரம், ஓர் அசைச்சொல்.



கூரை = சிற்றில், வீட்டின் மேற்புறம், சேலை.

கோரை = துளை, எருமை, துலம், தூலம், பழுது, ஒருபுல், சாமுதம், கோரைப் புல், ஒருகிழங்கு.

சரை = நரை, பார்வதி, ஓரரக்கி, கிழத்தன்மை, முதிர் வயது, வார்த்திகம், சருகினுற் கட்டுங்கவசம், வைக்கோல் முதலியவற்றுற் செய்யும் பொருள்.

சாரை=ஓர்பாம்பு, நீளமான வரை.

சிரை = குரங்கு, நரம்பு, சிரையென்னேவல்.

சீரை = சீலை, சீரம், மரவுரி, சீலைத் துணி, மரத்தோல்.



சுரை=கள், தேன், கறவைப் பசு, பூண், ஆகம், ஆலாபு, களவு, குழாய், கூடம், தும்பி, அமுதம், ஆணகம், ஆளகம், ஆனகம், உட்டுளை, உட்டொளை, ஓர்செடி, ஓர் கொடி, சூர்ணம், தும்பாலை, தும்பல், சுரைக்கொடி, அம்புத்தலை, கமண்டலம், சுரைக் குடுகை, திரிக்குழாய், பசு முதலிய விலங்கின் முலை, உள்ளீடில்லாது, குழிந்தவிடம்.

சூரை = கள், உருவை, தூதுளை, ஒருசெடி, ஒருமீன், நெற்றிப்புல், தூதுளைக்கொடி.

சேரை = சிறங்கை.

தரை = பூமி, நிலம், நரம்பு, பூமிமூலை, ஆணித்தலை, கருப்பாசயம்.

தாரை = நா, கண், மழை, வலி, சீலை, வழி, கூர்மை, சுவடு, தத்தம், மனைவி, பாய்கை, விரைவு, ஒழுங்கு, கண் மணி, நேரோடல், நேரோடுகை, விண்மீன், அபிடேகம்,

அபிஷேகம், எக்காளம், குதிரைநடை, கொடிப்படை, மழைத்தாரை, சிறுசின்னம், சக்கராயுதம், வாலியின் மனைவி, வியாழன்மனைவி, தத்தம் பண்ணுநீர், அரதநக் குற்றமைந்தினுள் ஒன்றாகிய கீற்று, பஞ்சகன்னியருள் ஒருத்தியான சுரகுருபத்தினி.

திரை = அலை, ஆறு, யாறு, ஒலம், கடல், சுருள், திரைவு, வாரம், இடுதிரை, திரைதல், வெற்றிலை, உடற்றிரை, திரைச்சீலை, புனற்றிரை, சலகாலகம், வைக்கோற்புரி, கொட்டைப்பஞ்சு, திரையென்னேவல்.

தீரை = அறிவுடையாள்.

துரை = அதிகாரி, மேன்மகன், சீமான்.

தேரை = தேய்தவளை, பிலவங்கம், இட்டமானவீகை, பிலவங்கதம், ஓர்வகைத்தவளை.

தோரை = கை, இயவை, ஓர்வகைநெல், ஓரிரண், ஓர்பனை, குளநெல், விரலிறை, இரத்தம், மயில்விசிறி, மூங்கிலரிசி, சரமணிக்கோவை, வெண்மைகலந்த சிவப்பு, மங்கனிறம்.

நரை = சரை, நாரை, எருது, சாமரை, சிவன், பெருமை, வெண்மை, இடபம், கவரிமா, சாமரம், ரிஷபம், நரைச்சல், நரைமயிர், நாரைப்புள், இடபவிராசி, மங்கல்நிறம், நரையென்னேவல், கருமைகலந்த வெண்மை, மாயையாக்கை பதினெண் குற்றத்தொன்று.

நாரை = நரை, நீராரை, வண்டானம், ஒருநீர்ப்பறவை, பாத்திரமடீரம்.

நிரை = கோவை, ததி, பசு, படை, வாடை, ஓரசை, பங்கு, வரிசை, ஒழுங்கு, பசுப்பொது, படைவகுப்பு, படைமுன்னணி, ஓர்விளையாட்டு, பசுக்கூட்டம், நிரையசை.

நுரை = பே, குமிழி, பேனம், பௌவம், வெண்ணெய், தண்டகம், நுரையென்னேவல், நீர்முதலியவற்றினுரை, மத்தியமண்டலம்.

பரை = பார்வதி, ஓரளவு, ஐந்து மரக்கால்கொண்ட ஓரளவு.

பாரை = ஒருமீன், வீசிகை, கடப்பாரை, கண்டாலம், கல்லான், இருப்புலக்கை, குழிகல்லுங் கருவி.

பிரை = உறை, உறைமோர், அரைப்பங்கு.

பீரை = பீர்க்கு.

புரை = வீடு, அறிவு, களவு,  குடில், பழமை, பழுது, மாடம், மேன்மை, உட்டுளை, குற்றம், மடிப்பு, உயர்ச்சி, குழிப்புண், தேவாலயம், பன்னசாலை, மாடக்குழி, இரகசியம், உவமையுருபு, புரையென்னேவல், தெரிநிலை வினைப் பகுதி.

பூரை = பூரணம், குறைவின்மை, இன்மை, நிறைவு.

மரை = கூலம், தவளை, ஆவிதம், ஓர் வகை மான், காட்டுக்குதிரை, தாமரை- இது முதற்குறையாய் மரை என நின்றது.

முரை = நந்தன் மனைவி, சந்திரகுப்தன் தாய்.

மேரை=வகை, மரியாதை, குடிமக்கட்குக் களத்திற்றரும் தானியம்.

வரை = கரை, மலை, வரி, அளவு, வரைவு, மூங்கில், விரலிறை, விவாகம், சிறுவரம்பு, வரையென்னேவல்.

வாரை = திராந்தி, காத்தண்டு, மரவுத்திரம், இது சுமைதடி யென்க.

விரை = தூபம், வாசனை, வித்து, பூந்தேன், நறும்புகை, கலவைச் சாந்து, விரையென்னேவல்.

வீரை = மாதா, வாழை, கடல், மனைவி, ஓர்மரம், துன்பம், வட்டத்திருப்பி.

ஆர் = கூர், சோதி, பாகு, பூமி, யார், அருமை, ஆத்தி, கொன்றை, நிறைவு, நுண்மை, கூர்மை, ஆத்திமரம், ஆரென்னேவல், ஐந்துருவாணி, தேர்ப்பண்டியகவாய், யாரென்வினா, வண்டியிலை.

ஈர் = அறு, இழு, உரி, பிள, நமிடு, கருப்பம், பேன்முட்டை, ஈரென்னேவல், மயிரிற்பற்றுமீர், முன்னிலைப்பன்மை விகுதி.

ஊர் = ஏறு, காடு, செடி, சேரி, நாடு, பதி, பாடி, பாணி, பாழி, புரி, பேடு, வேலி,  உலவை, காமம், சும்மை, சோர்வு, தவழ், நகர், பரவு, பள்ளி, புரம், பூண்டி, வடம், வசதி, வைப்பு, அகநிலை, ஆதரம், இருக்கை, உறையுள், ஊர்கோள், ஒக்கம், கிராமம், குப்பம், கேடகம், கோசரம், சாதனம், செலுத்து, தினவுறு, நத்தம், பாக்கம், பூக்கம், பூரி

யம், வாழ்க்கை, இல்லிடம், காண்டகம், குடிக்காடு, குவ விடம், சக்கரம், சம்வாகம், நிவேசனம், பட்டணம், பட் டினம், புகலிடம், மண்டிலம், ஊரென்னேவல், கோயிற் பற்று, ஊர்கோள்வட்டம்.

ஏர் = அழகு, உழுபடை, உழுமாடு, உழவுமாடு, உழவுத் தொழில், உழவுக்கிசைந்த தளபாடம், உவமையுருபு.

ஓர் = ஒன்று என்பதன் திரிபு, ஆராய், தெளி, ஓரென் னேவல்.

கார் = எலி, நீர், அழகு, ஆவணி, இருள், கருமை, மேகம், அச்சம், கார்நெல், வெள்ளாடு, கார்காலம், காரென்னேவல், கருங் குரங்கு, எரிற்பூட்டிய இரும் பாணி, புரட்டாசியின்பருவம்.

சீர் = சொல், வார்த்தை, ஒலிக்குறிப்பு.

கூர் = கடு, சுணை, நுனி, காரம், குச்சு, கூர்மை, மிகுதி, சிறப்பு, சிருங்கம், இலைக் காம்பு, கூரென்னேவல், நென் முதலியவற்றின் கூர், குற்று தலான பேச்சு.

சார்=வகை, அழகு, இடம், தட்டி, திண்ணை, பகுதி, இள வோலை, பக்கம், அணைக்கரை, தாழ்வாரம், பாகம், ஏழ னுருபு, கடலுண்மேடு, சாரென்னேவல்.

சீர்=ஒலி, சொல், நடு, பண், பொன், அழகு, அளவு, கனம்,



தராசு, தலைமை, தன்மை, தாளம், துலாம், நன்மை, நிலைமை, பாரம், புகழ், பெருமை, முச்சை, வாழ்வு, ஒழுங்கு, காவுதடி, கிரமம், இய ல்பு, சிறப்பு, சுபாவம், செல்வம், துலாராசி, நன்னடை, இரைச் சல், செழிப்பு, காத் தண்டு, காற்றண்டை, சித் திரம், சிலம்பம், தாள வொத்து, நிலைபரம், நிருவா கம், மிகுபுகழ், தண்டாயுதம், நடுத்தரம், செய்யுளுறுப்பி னொன்று, ஒருதாளத்தில் முடிந்துவிடுங்காலத்தினைத் தன்னிடத்துக்கொண்டது.

சூர் = நோய், மிளகு, யோ கினி, வீரம், அச்சம், அஞ்சா மை, துன்பம், தெய்வம், தெய் வப்பெண், சூரென்னுமரசன், ஓரசுரன், வனதேவதை, சூரென்னேவல், வால்மிளகு.

சேர் = தலை, ஓரளவு, ஓர் நிறை, ஓர்மாடு, ஒரு முகத் தலளவு, ஓர்நிறையளவு, ஓரேர் மாடு, பிணையல், சேரென்னே வல், தானியப்போர்.

சோர் = சோர்வு, சோரென்னேவல்.

தார் = பூ, சேனை, தாறு, படை, மாலை, கொடிப்படை, பூவரும்பு, கிண்கிணி மாலை, படை வகுப்பு.

துர் = தீதுப்பொருடருமோருப சருக்கம்-இது துன் எனவும் வரும்.

தூர் = சேறு, வேர், மண்டி, வண்டல், தூரென்னேவல், பாத்திரத்தினடிப்புறம்.

தேர் = அரி, பொறி, கவரி, குயவு, கூபரி, கூவிரி, சூதம், திகிரி, பாகன், வையம், இரதம், கூவிரம், கொடிஞ்சி, பிரம்பு, எந்திரம், சந்திரன், சிவவிந்து, சிவவீசம், யந்திரம், உரோகணிநாள், சயந்தனம், தேரென்னேவல், தெரிநிலை வினைப்பகுதி, நால்வகைத் தானையினொன்று.

நார் = அன்பு, கயிறு, சிம்பு, தும்பு, மட்டை, கல்நார், சல்லம், நரம்பு, பன்னாடை, சோடசம், சல்லகம், மட்டை முதலியவற்றின் நார், பனை மட்டை முதலியவற்றின் வெளிப்பக்கத்தைப் போர்த்திருக்குங் கடினமானதோல்.

நிர் = வெளி, உறுதிப்பொருளையும் நீக்கப்பொருளையுந் தருமோருபசருக்கம், அஃது நிரு என்றும் நிர் என்றும் வழங்கும்.

நீர் = கோ, மை, அம், அவி, ஆம், ஓமி, கம், கார், சாறு, சீலை, தோணி, நிலை, பாணி, பீவை, மது, மழை, மாரி, வசி, வசு, வாரி, வார், அப்பு, அம்பு, அமுது, அயம், அலம், அலர், அவிசு, அறல், ஆபம், ஆலம், இதடி, ஈரம், உதம், கடல், கயம், குசம், குணம், சரம், சலம், சவம், சிந்து, சீதம், சுகம், சூமம், தகம், தன்மை, தோயம், நாரம், நீரம், நீவிர், நேபம், பண்பு, பதம், பயசு, பயம், பயன், பாயம், பீதம், புயல், புனல், பேயம், மேகம், வனம், வாயம், விகடி, விஷம், அகாதம், அகிலம், அந்தம், அமுதம், அளகம், ஆருவம், இரசம், உதகம், கஞ்சம், கபீடம், கமலம், காண்டம், கீலாலம், கோமலம், சதனம், சவரம், சவலம், சவிலம், சீவனம், தண்ணீர், தாமரம், நலிதம், நளினம், நீசகம், நீவரம், பயசம், பானீயம், பிசிதம், புவனம், மேகநீர், வருணம், வலாகம், வியோ



மம், விலோமமம், அமிர்தம், அமுதகம், அம்பணம், அம்புதம், அம்புயம், உட்டிரம், கபந்தம், கவந்தம், கழியிடம், கனரசம், கிருபீடம், குலீநசம், சந்திரம், சப்பரம், சரலகம், சருவகம், சற்கதம், சீவனுகினி, சீவனியம், சிவனீயம், சுக்கிரம், சுப்பிரம், தகனுராதி, தீர்த்தம், பிப்பலம், பிராணதம், புட்கரம், பூராடநாள், மூத்திரம், ஆனர்த்தம், கருப்புரம், கனவிரதம், கார்ப்புரம், சீதோத்தமம், பற்பரீகம், பிரசாகிதம், புண்பொழி நீர், மேகபுட்பம், யதோநிவாசம், வார்த்தரம், அப்பிரபுட்பம், உட்டண சஞ்சீவி, வன்னிமாரகம், பஞ்சபூதத்துளொன்று, பூராட நட்சத்திரம், அட்டமூர்த்தத்தொன்று.

நேர் = ஆணை, எது, சரி, நீதி, நெறி, பாதி, முன், உவமை, எதிர், ஓரசை, கற்பு, செவ்வை, தகுதி, நீளம், வரிசை, ஒழுங்கு, நுட்பம், உடன்பாடு, ஒப்புரவு, சத்தியம், நுணுக்கம், நேரென்னேவல், ஆணைசத்தியம், மேல்வரிசை.

பார் = கரை, பாறை, பூமி, முறை, தேசம், தேயம், நிலம், அடுக்கு, படுக்கை, புத்தன், பார்ப்பார், உரோகணிநாள், பாரென்னேவல், தேரின் பரப்பு, வண்டிப் பார்.

பீர் = துளி, பசலை, அச்சம், பீர்க்கு, முலைப்பால், ஒலிக் குறிப்பு, அச்சத்தான் வேறுபட்ட நிறம், பசலைநிறம்.

போர் = ஓதி, கலி, செரு, மல், தெவ், படை, வினை, அமர், அடல், இகல், சண்டை, சமம், சமர், சமிதி, ஞாட்பு,



எதிரித்தளம், தாவடி, திறல், தும்பை, தெவ்வு, பூசல், மலைவு, ஆகவம், ஆயோதம், உறழ்வு, ஓதனம், கணையம், கதனம், கலகம், காளபம், குறும்பு, சமரம், சமிதம், சமீகம், சமீரம், சராகம், திணிகம், தெவ்வினை, தொந்தம், நெற்போர், பண்டம், பொருதல், போர்ப்பு, மலைதல், மலைப்பு, மிருதம், யுத்தம், வராகம், விரோதம், விறப்பு, வெவ்வினை, அடர்ப்பு, அராபதம், ஆயோதனம், சங்கரம், சங்குலம், சதயநாள், சதையநாள், சந்நியம், சமாகாதம், சமுதயம், சமுதாயம், மரப்பொது, சன்னியம், தீட்சணம், நிகர்ப்பு, பிரசரம், விதர்ப்பு, அம்பரீசம், சங்கிராமம், காளையங்கம், சாம்பராயம், தானியப்போர்,

மாண்டரவன், சம்பராயகம், சம்பராயிகம், சம்பிரகாரம், சதய நட்சத்திரம்.

மார்=மார்பு, இடைச்சொல்.

மோர் = அணை, அளை, ஐயம், முசர், கடுரம், காலேயம், மச்சிகை, மதிதம், மலினம், அமிர்தம், அரிட்டம், அருப்பம், கங்கரம், கச்சரம், காலசேயம், தக்கிரம், விலோடிதம், தண்டாகதம், ததிசுவேதம், ததிமண்டம்.

யார் = ஆர், யாவர், நத்தைச்சூரி.

வார் = வள், நீர், கச்சு, கச்சை, நீளம், நுண்மை, நேர்மை, புயல், வகிர், கச்சம், தோல்வார், கடைகயிறு, வாரென்னேவல், வகிர்நரம்பு.

வேர் = ஆதி, சடை, சிவை, தூர், பதி, கோபம், நேமம், மூலம், வேர்வை, மரவேர், காரணம், திப்பிலி, மோரடம், நேத்திரம்.

ஆல = ஆட.

ஏல = ஏற்க.

கால = கக்க, காலனே என்னும் விளி.

கோல = வகுக்க.

சால=மிகுதியாக, போதும்படியாக.

சில = கொஞ்சம், பலவென்பதின் எதிர்மொழி.

சீல = தூய்மையானவனே என்னும் விளி.

துலா = துலை, பாகம், ஏற்றம், ஓர்நிறை, கைமரம், திருகூசி, துலாராசி, நிறைகோல், ஏற்றமரம், பண்டிக்கோல், ஒன்றற்குச் சரியாந்தன்மை, நீரிறைக்குந் துலா, பண்டியேர்க்கால்.

தோலா = தோல்வியில்லாத, ஓர் நிறை.

நால = தொங்க.

நாலா = தொங்காத, நான்கா என்னும்வினா.

பல = நானா, வெகு, அனேகம், ஒன்றல்லன, சிலவென்பதின் எதிர்மொழி.

பலா = பாகல், பனசம், வருக்கை, ஒருமரம், பலாமரம், ஏகாரவல்லி, சிற்றுமுட்டி, முரசபலம், முழக்கனி, மூலபலதம், மிருதங்கபலம், முட்புறக்கனி.

பால = பாலனே என்னும் விளி.

போல = ஒரு உவமையுருபு.

நிலா = ஒளி, நிலவு, சந்திரன், சந்திரிகை, சசிப்பிரபை.

பூலா = பூல், ஓர்செடி, செகராசி, பெருங்கிச்சிலிக்கிழங்கு.

போலா=ஒப்புமையில்லாத.

மேலா = மேன்மையா என்னும் வினா.

விலா = புழு, பிண்டம், பார்ச்சுவம், விலாப்பக்கம்.

வேலா = வேலனே என்னும் விளி.

அலி = தீ, பேடு, பேடி, பேதை, எமன், பேடன், இயமன், சண்டன், நெருப்பு, மகண்மா, பலதேவன், பெண்டகன், நபுஞ்சகன், நருவிலிமரம், நறுவிலிமரம், வெளிற்றுமரம்.

ஆலி = கள், மழை, காற்று, அமுதம், மழைத்துளி, ஆலங்கட்டி.

இலி = இல்லாதவன், எலி.

ஈலி = கைவாள், சுரிகை.

எலி = கள், கார், கோளை, சிகா, சிகரி, மூசம், உந்துரு, களிமம், குகனன், பிருதாகி, பூரநாள், மூடிகம், மூஷிகம், விருசம், விருடன், உந்தரம், உந்துரம், பிலேசயம், உபசித்திரை, கள்ளிமரம், மகிந்தகம், விருடலோசனம், விருடலோசனன், கானகச் சேவுகன், வச்சிரதசநம்



ஒலி = இசை, இடி, இரை, உசை, உரை, உளை, ஓசை, ஓதை, ஓலை, ஓல், கணை, கலி, கனை, குரை, சிலை, சீர், செழி, துவை, தொனி, பாடு, அதிர், அமலை, ஆம்பி, இமிழ், இயம், ஓலம், கவ்வை, காற்று, கானல், குரம், குரல், குரவை, குளிறு, கோகணை, கோஷணை, கோடணை, சகுலி, சத்தி, சும்மை, சுருதி, ஞிமர், ஞெளிர், தாடகம், துவனி, துழனி, நாகம், நாதம், பயிர், வகுனி, அரற்று, அரவம், ஆகுலம், ஆடைவெளு, ஆரவம், ஆராவம், ஆர்ப்பு, ஆர்வம், இரட்டு, இடிப்பு, உரற்று, கதிப்பு, கம்பலை, கலிப்பு, சத்தம், சிலம்பு, ஞரல்வு, துவானம், தொனிப்பு, நாதகம், நிந்தம், நிநாதம், படுதல், புலம்பு, முழக்கு, வாசிதம், வாதனம், விராவம், அதிர்தல், அநுநாதம், ஆரம்பம், ஆரவாரம், இரக்கம், எழுத்தொலி, ஒழுக்கம், கர்ச்சனை, குகலிதம், சிலம்பல், திமிர்தம், துளக்கம், பழங்கண், புலம்பல், முழக்கம், கிரந்தனம், மிருதங்கம், ஒலியென்னேவல்.



கலி = ஒலி, கேடு, சநி, போர், வலி, வெளி, அம்பு,

கடல், சிறுமை,
வறுமை, இருமல், கலகம், கலிப்பா, கீர்த்தி, செருக்கு, தடிப்பு, துன்பம், பெருக்கு, கலிபுருடன், கலியுகம், தழைத்தல், வஞ்சகம், கலியென்னேவல், பனங்கிழங்கு, தெரிநிலை வினைப்பகுதி.

காலி = கார், ஒழிவு, ஒரு சத்தி, கழிவுநாள், பூனைக்காலி, காலையுடையது, புனமுருங்கை, வெறுமை, காட்டுமுருக்கு, காலியாங்துவரை, பசுக்கூட்டம், இலங்காத்தீபத்துள்ள ஒருநகரம்.

கிலி = பயம்.

கீலி = தந்திரவாதி.

குலி = மனைவியின் மூத்த சகோதரி, யாக்கை.

கூலி = பிட்சை, பிருதி, போகம், நாட்கூலி, பாடகம், வேதனம், பரணியம், சம்பளம், கூலிக்காரன், வேலை கண்டு கொடுப்பது.

கெலி = ஆசை, பயம், கெலியென்னேவல், தெரிநிலை வினைப்பகுதி.

கேலி = போலி, அம்பு, தமாசு, தமாஷ், நிந்தை, பகிடி, பறவை, கிண்டல், சூரியன், விகடம், இகழ்ச்சி, பரிகாசம், மக்கனம், இசைப்பாட்டு, நாயகரோடு செய்யும் மகளிர் விளையாட்டு.

கைலி = ஒருவகை ஆடை.

கோலி = வகுத்து, சிறுவர் விளையாடும் குண்டு.

சலி = சலியென்னேவல், தெரிநிலை வினைப்பகுதி.

சாலி = கள், நாவி, நெல், கவசம், நென்மணி, நெற்பொது, மிக்கோன், அருந்ததி, நெற்பயிர், மராமரம், புழுகு சட்டம்.

சீலி = நற்குணமுடையாள்.

சூலி = காளி, சிவன், துர்க்கை, கருப்பிணி, கர்ப்பிணி, சதுரக்கள்ளி, புரோற்கீதங்கேட்ட ஒருவன்.

சேலி = வஸ்திரம்.

சோலி = உலோட்டி, காரியம், தொந்தரை, தொந்தறை, சடங்கம், தொந்தரவு, பாம்பாட்டம், மார்க்கச்சு, முலைக்கச்சு, தோணியி லொதுங்கிடம்.

தாலி = பலகறை, திருப் பூட்டு, மங்கல நாண், மங்கலியம், மாங்கலியம், மட்பாத்திரம், மாங்கல்லியம், கீழ்க்

காய்நெல்லி, ஐம்படையாகிய வோரணி.

துலி = துளி, பெண்ணாமை.

தூலி = எழுதுகோல், பருத்தவள்.

தைலி = தைலிகன், வாணியன்.

தோலி = உமி; பழத்தோல், தெரிநிலை வினைப்பகுதி.

தோலி = ஒருபிசின், ஒருமீன், தழுக்குணிப்பெண்.

நலி = தெரிநிலை வினைப்பகுதி

நாலி = கார்த்திகைப்பூ.

நீலி = காளி, அவுரி, கருப்பு, துர்க்கை, பார்வதி,

கருநொச்சி, பழையனூர் வணிகன் மனைவி, மேகவண்ணப்பூவுள்ள மருதோன்றி மரம்.

பலி = இறை, பசு, சோறு, நீறு, பூசை, ஆகுதி, காகம், சேடம், பிச்சை, மகம், யாகம்,

சாம்பல், போசநம், மன்னியு, அற்பிதம், ஆகவனம், உடற்றிரை, தேவருணவு, பலிப்பது, உபாகிருதம், சோற்றுப்பலி, பலிமிருகம், பாரவிருதம், விண்ணோருணவு, பலிபதார்த்தம், ஓர்சக்கரவர்த்தி, காய்த்திருந்தமரம்.

பாலி = அணை, கரை, கள், பானை; எல்லை, புகழ், வரிசை, ஆலமரம், ஓர்பாஷை, ஓர்யாறு, பாற்பசு, வாண்முனை, காதிற்சோணை, சுற்றளவு, செம்பருத்தி, பாலியென்னேவல்.

பீலி = மலை, பொன், மதில், மயில், விசிறி, தொங்கல், பத்தல், பறைப்பொது, மயிற்றோகை,

வாச்சியம், ஆலவட்டம், சிறுசிங்நம், சிறுசின்னம், ஒட்டச்சீட்டு, நீர்பாய்தொட்டி, பெருஞ்சவளம், சிற்றாலவட்டம், மாதர்காலணியினொன்று, பனங்கிழங்கினுட்குருத்து.

புலி = தீவி, பீரு, உழுவை, ஊகம், தொடரி, பாய்மா, போத்து, வேங்கை, குயவரி, குளியம், கொடுவரி, மிருகாதி, மிருகாரி, வயவரி,

வெல்லுமா, கராசனம், நகாயுதம், பயானகம், மருவகம், வனச்சுவை, விருகாராதி, சார்த்தூலம், சிங்கவிராசி, சித்திரகம், புண்டரீகம், மிருகா

சனம், மிருகாசீவன், மிருகா
தநம், மிருதாரகதி, வியாக்
கிரம், சித்திரகாயம், வேங்
கைப் பட்டை, மிருகார்த்த
னம், நால்வகைச் சந்தி
ஞென்று.

பேலி = "பலி" பார்க்க.

பேலி = குதிரை.

பொலி = அன்னியதாப்
பிரதி பத்தி, புடைத்தநெல்,
பொலியென்னேவல், தூற்று
நெற்குவியல்.

போலி = கேலி, ஒப்பு,
சாயல், ஒட்டகம், ஒன்றுபோ
லொன்றிருத்தல், கள்ளமு
மிளப்புமா யிருப்பது.

மலி = மிகுந்த.

மாலி = கள், ஓர் இராக்க
தன், மாலையணிந்தோன்.

மூலி = கிழங்கு, மருத்துப்
பூடு, வேருள்ளமரம்.

மெலி = மெல்லெழுத்து,
தெரிநிலை வினைப்பகுதி.

மொலி = முக்கல்.

மோலி = மௌலி.

மௌலி = கள், சடை, தலை,
பூமி, முடி, மயிர்முடி, உச்சிக்
குடுமி.

வலி = தா, அரி, ஈடு, எண்,
ஏண், ஒலி, கலி, கூளி, கோள்,
தாரை, தாவு, திண், துடி,
பகை, பாழி, பீடு, மது, மல்,
மீளி, மூரி, வரி, வல், வள்,
அடல், ஆண்மை, இகல்,
இரேகை, உரம், உரவு,
உறுதி, எழில்,
எறுழ், ஏணம்,
குரங்கு, ஞாட்பு,

தரம், தாக்கு, தானம், திடம்,
திண்மை, திறமை, திறல்,
தீரம், துப்பு, நட்பு, நோன்மை,
மஞ்சு, மதப், மதன், மதுகை,
மறம், மிடல், முடலை, முரண்,
முன்பு, மைந்து, வயம்,
வலன், வவ்வி, வளம், வற்பு,
வன்மை, வாய்மை, விறல்,
வீச்சு, வீரம், உம்பல், உரப்பு,
ஆற்றல், ஊக்கம், ஊற்றம்,
ஓர்நோய், கபடம், திண்
ணம், தோற்றம், மல்லல்,
மள்ளம், மள்ளல், மாவுரம்,
மொய்ம்பு, வலிப்பு, வலி
யோன், வல்லமை, அபதா
னம், சத்துவம், மெய்நகம்,
அகங்காரம், அபதானகம், ஆட்
சேபகம், தற்செல்வம், பற்
றிருப்பு, பிரசண்டம், ஓரலங்
காரம், நறுவிலிமரம், பராக்
கிரமம், வலியென்னேவல்.

வாலி = வைரோசனி, ஐந்
திரன், பலதேவன், வைரோ
சனன், விரோசனசுதன், கிட்
கிந்தை மன்னன், இந்திரன்
மகனாகியவானரன், சுக்கிரீ
வன் தமயன்.

வேலி = நீக்கல்.

வேலி = இளை, மிளை, ஊர், காப்பு, காவல், தோட்டி, நிலம், நேமம், மதில், வயல், வன்னி, அடைப்பு, அரணம், ஆவிருதி, கிராமம், சூழ்தல், அவரோதம், ஆவரணம், ஆவேட்கம், பிராசிரம், பிராவரம், பிராவிருதி, அரணும்பரம், நிலத்தளவையினொன்று.

ஆலு = நீர்க்குடம்.

உலு = பதர்.

எலு = கரடி.

கோலு = சேவை, சமுகம், நிமிர்ச்சி, கொலுமண்டபம்.

சேலு = மீன்சிறை, மெலிந்த கறுவிமரம்.

தாலு = நாக்கு, அண்ணம்.

திலு = மூன்று.

நாலு = நான்கு.

பீலு = பூ, அணு, யானை, அம்பு, செந்து, அச்சம், எறும்பு, உள்ளங்கை, ஓர் மரம், அச்சமுடையோன்.

புலு = பத்து.

மேலு = வலு.

மோலு = மொல்லு, இரைச்சல்.

வலு = மெலு, கொசுகு, வலிமை, கனமுள்ள.

வாலு = சாகை, ப்ரவாஹம், பசுப்புட்டம், வாலுளுவையரிசி.

அலை = அடு, கொலை, திரை, வீசி, ஊர்மி, கடல், புணரி, ஊர்மிகை, தள்ளாடு, பங்கம், வருந்து, அலைத்தல், கடற்றிரை, கருமணல், புனற்றிரை, அலையென்னேவல்.



ஆலை = சள், கிட்டி, கரும்பு, எந்திரம், கரும்பாலை.

இலை = பூ, அடை, ஏடு, ஓலை, சாகை, தழை, தோடு, முறி, உலவை, தகடு, தலம், தளம், பலம், பாசடை, உலோபம், தண்ணடை, தமாலம், தழைப்பு, பச்சிலை, பத்திரி, பலாசம், பன்னம், வருகம், வாதாயம், வெற்றிலை, இலைக்கறி, பத்திரம், பத்திரகம்.

உலை = கம்மாளனுலை, உலையென்னேவல், நெருப்புள்ள வடுப்பு, பாகஞ்செய்யவைக்கும் நீருலை.

ஓலை = ஒலி, தோடு, மாழை, சீட்டு, தாழையோலை, தென்னோலை, நமனோலை, எழுதுமோலை, பனையோலை, கமுகு-தாழை-தெங்கு-பனை முதலியவற்றினோலை.

கலை = சிலை, நூல், இரலை, கல்வி, சவ்வு, மேகலை, ஆண்

மான், ஆண்முசு, கருமான், சுறுமீன், புல்வாய், வயிரம், சரீரம், பிரகாசம், பேயாட்டம், மகரமீன், மகரராசி, வச்சியம், எட்டுவிநாடி, காஞ்சிமரம், மரக்கொம்பு, அரைப்பட்டிகை, கலையென்னேவல், குதிரக்கலணை, சந்திரன்பங்கு, சுவாசத்தின்பகுதி, வண்ணங்களினேரடி.

காலை = காலா, துடி, பொழுது, முடிவு, அடைப்பு, ஓர்மீன், சமயம், தொழுவம், விடியற்காலம்.

குலை = படு, குதை, மூகை, கொத்து, நெட்டு, செய்கரை, விற்குதை, ஈரற்குலை, நடுக்கம், பூங்கொத்து, அம்பின் குதை, குண்டிக்காய், குலையென்னேவல், ஈந்து-கமுகு-காந்தள்-தெங்கு-பனை-வாழை முதலிய மரக்குலை.

கேலை = முழங்கைகயிடி, நெருப்புச்சுவாலை.

கைலை = கைலாசம், கயிலைமலை, வேதண்டம்.

கோலை = ஊறு, காது, காதை, கோள், சாவு, மாரி, வதை, அத்தி, ஈஞ்சை, காதம், காதல், செறல், செறுவு, வதம், அணங்கு, ஆகாதம், இங்கிசை, ஈங்கிசை, ஈங்கிஷை, ஊறுகோள்,



கதனம், காசனம், காதகம், கொல்லல், சாருகம், செறுப்பு, பாவகம், பிஞ்சம், விசரம், விநாசம், வேட்டம், அபிமரம், அபிமானம், அருப்பம், ஆகாதனம், ஆரம்பம், உயிர்வதை, உற்சேதம், கிரதனம், கொல்லுதல், சஞ்சரம், நிகாரணம், நிடுதனம், நிர்வாணம், பராசனம், பிஞ்சகம், பிரமயம், வல்லதம், விகன்னம், விசசனம், விசாரணம், விநாசனம், உச்சாசனம், உன்மந்தம், சங்கரிப்பு, நிகுஞ்சனம், நிக்கிரகம், பிரசமனம், பிரமாபணம், பிரவாகனம், பிரோட்சணம், அபிசற்சனம், அப்பியாகமம், உத்துவாசனம், கொலைக்குற்றம், பரிவற்சனம், பிரகநிகானம், பிராணாந்திகம், அதிசருச்சனம், அபிசர்ச்சனம், காயத்தீக்குணம் மூன்றி னொன்று, தாமத குணத்து ளொன்று, பஞ்சபாதகத்துளொன்று.



சாலை = அறை, கோயில், அரண்மனை, அரங்கம், தவச்சாலை, மரச்சாலை, வரண்டம், விதர்த்தி, அரசன்மனை, குதிரைச்சாலை, அறத்

தின் சாலை, குதிரைப்பந்தி, வெளிமண்டபம், சபைகூடுமிடம், இருமருங்கும் விருட்சங்கள் செறிந்தபாதை.

சிலை = ஒலி, கல், மலை, வில், ஆகவம், தனுராசி, மனோசிலை, மூலநாள், ஓர்மரம், தனுவிராசி, சூதபாஷாணம், விக்கிரகம், சிலையென்னேவல், முலவிக்கிரகம்.

சீலை = ஆடை, உடை, கலை, காரை, கூறை, கோடி, சாடி, சிறை, சேலை, தாரை, தூசு, நீவி, புனை, மடி, அசல், அலீசா, அறுவை, ஆசிடை, கண்டை, கந்தை, சோமன், துட்டி, தோக்கை, பஞ்சு, படாம், பட்டி, புடவை, புடைவை, வாசம், ஆசாரம், ஆதனம், ஆர்வம், இடைதல், உடுக்கு, உடுக்கை, ஏடகம், ஒலியல், கஞ்சிகை, காடிகம், காண்டம், கோசிகம், கோடிகம், சில்லிகை, சிற்றில், சீத்தல், பட்டம், பட்டிகை, பிடியல், புங்கம், புட்டம், மாறுகம், வட்டம், வாகனம், வாதனம், அக்காரம், அம்பரம், ஆவரணம், உடைமானம், கப்படம், கலிங்கம், சம்படம், சம்பரம், வத்திரம், கந்தித்தம், பரிவட்டம்.



சூலை = இணர், ஒருநோய், ஆசியாகபித்தம், ஈனத்தொனீச்சுரம்.

சேலை = சீலை, அசோகு, சைலம், புடவை, மகளிராடை, வத்திரம், முழுப்புடவை.

சோலை = அரி, கானம், துடவை, தோப்பு, பூங்கா, பொழில், காமரம், கோடாரம், ஆராமம், செய்கால், தண்டலை, தாருகம், தோட்டம், பொங்கர், உத்தியானம், உபவனம், உய்யானம், தாருவனம், இளமரக்கா, உய்யானனம், மரச்செறிவு, மரப்பொது, நந்தனவனம், விருட்சவாடிகை.



தலை = க, ஆதி, கம், சூடு, திசை, நுனி, முடி, இடம், உச்சி, உவ்வி, ஓராள், சிரசு, சிரம், சென்னி, தரம், தலைமை, பெருமை, முதல், விரிவு, ஆகாயம், சிகரம், சீரிடம், சூடாலம், சேகரம், தலைவன், நவிரம், மண்டம், முண்டம், அதிகாரம், கூர்ச்சம், சிரங்கம், சிராங்கம், சைந்

தவம், மத்தகம், மூர்த்தம், மூர்த்தனி, மூர்த்தினி, உத்தமாங்கம்.

துலை=துலா, நிறை, ஒப்பு, கனம், தூரம், துலாராசி, நூறுபலம், மடைமுகம், துலையென்னேவல், நீரிறைக்குந் [துலை.

தூலை = பருத்தி.

தோலை = துலை, அதம், உவமை, எல்லை, தூரம், தொலையென்னேவல்.

நாலை = நாளம்.

நிலை = எண், சாலை, தாணு, திசை, பூமி, ஆஸ்தை, இடம், குணம், ததல், தாரணை, திரம், தொழில், நிலைமை, நிற்பு, நேரம், பதவி, பவம், பொழுது, முறைமை, ஆதனம், ஆதாரம்,



உருபம், உலகம், கவிப்பு, தம்பம், தாபகம், தாவரம், நிலையம், நிலைபேறு, பரப்பு, அந்தஸ்து, கதவுநிலை, ஸ்தானியம், நிச்சயம், நிலைக்கல், நிலைபரம், நிற்குநிலை, மார்க்கம், அதிட்டானம், அவத்தானம், ஆச்சிரமம், நிலப்பரப்பு, நிற்குந்துணை, நிலையென்னேவல், ஆபரணத்திற்றெங்கணி.

நோலை = கொலையல், அப்பவருக்கம்.

நோலை = எள்ளுருண்டை.

பலை = பழம்.

பாலை = கடல், சிவணி, சேச்சை, பிரிவு, வராணி, வெம்மை, ஓர்கொடி, ஓர்மீன், சிவந்தி, மருவாரி, வதுவடி, ஓர்மரம், பாலைநிலம், பாலைப்பண், இந்திரபம், நீரிலாநிலம், புநர்பூசநாள், புனர்பூசநாள், பதினாறுவயதிற்கு மேற்படாதவளாகிய பெண், பாடற்சுவையினொன்று, ஓர்வகைப்பாடல், மிருகசீரிடநாள், மிருகசீரிஷநாள்.

மலை = கோ, அரி, அவி, ஓதி, ஓதை, கல், கிரி, சிகி, சிலை, தாணு, நாகு, பரு, பாணி, பீலி, பொறை, போதி, மண், மரு, மேரு, வரை, அகம், அசலை, அத்தி, இரவி, உவமை, கல்லு, களரி, கிராவை, குவடு, குன்று, கைரம், சாரல், சிகரி, சையம், சைலம், சோமன், தடம், தரணி, தரம், தாடம், திகிரி, திடர், திடல், நகம், நாகம், பதலை, பாதிலி, பொச்சை, பொற்றை, முகடு, விடம், விண்டு, வீரம், வெற்பு, அகமம், அசலம், அத்திரி, இரும்பு, இறும்பு, ஏந்தல், ஓங்கல், ஓதிமம், கடகம், காண்டம், கிராவம், குகிலம், குட்டநி, குன்றம், குத

ரம், கேதாரம், கைரேயம்,

கோத்திரை, சயிலம், சிகரம், சிமயம், சிமிலம், சிலம்பு, சுதாமனு, தவாவினை, தாபரம், தாலிசம், தாவரம், துங்கம், நவிரம், பளகம், பறம்பு, பாதவம், பூதரம், பொகுட்டு, பொங்கர், பொருப்பு, மலையம், மாதிரம், மேதரம், வராகம், அடுக்கல், அத்திரம், இறும்பூது, கல்லகம், காளிக்கம், கிக்கிலம், கிராவனம், குட்டாரம், குட்டீரம், குத்திரம், குறும்பொறை, கோத்திரம், சக்கரம், தராதரம், பிறங்கல், தராங்கம், பத்திரம், பருவதம், பர்வதம், பார்வதம், பாராருகம், பாராவதம், புறவிடன், பூத்திரம், பகீதரம், விலங்கல், வேதண்டம், சிலோச்சயம், சைகதவுண்டை, தருத்தரம், பருப்பதம், பூமித்திரம், மகாகச்சம், மகீத்திரம், மங்கலமொழி, வசுதாதரம், கந்தராகரம், களங்கசத்துரு, அசையாப்பருங்கல், தரணிகீலகம், பிருதுகேசுரம்.

மாலை = அணி, அரி, இரா,

தார், தொடை, வாகை, நோய், பிணை, முறை, வரி, பெண், கோதை, அந்தி, ஆரம், இண்டை, கண்ணி, சந்தி, சரம், சாயம், சுக்கை, சூட்டு, தாமம், தொடர், தொடலை, படலை, மாசிகை, மாலிகை, வரிசை, யட்டி, அணியல், இயல்பு, ஒலியல், ஒழுங்கு, கத்திகை, சிகழிகை, தொடையல், தொங்கல், தெரியல், பிணையல், மஞ்சரி, அலங்கல், இலம்பகம், ஒழுக்கம், சுருங்கல், மந்தரம், மயக்கம், வரன்முறை, அரசன்மனை, சாயங்காலம், தொடுத்தமாலை, பிராலம்பிகை, அந்திப்பொழுது, ஓர் பிரபந்தம், ஒழுங்காயிருப்பது, பூமுதலிய தொடுத்தமாலை, சொல்லாலும்-பூவாலும்-பொன்னாலும்-மணியாலுந் தொடுத்ததொடை.

முலை = சுசி, சுரை, குசம், குஜம், குயம், கொங்கை, கொம்மை, சேக்கை, தனம், நகில், வாமம், அம்மம், சொற்கம், ஸ்தனம், நகிலம், பறம்பு, உரசிதம், உராதரம், உரோருகம், குருக்கண், தன்னியம், பயோதரம், உரசிருகம், சுவர்க்கம், கண்டற்குயம், விலங்கின்மடி.

மூலை = குடா, கோடி, வீடு, கோணம், உரோசம்.

மேலை = மை, மேல், மேற்கு, மேன்மை, மேலிருப்பது,

வருங்காலம், அஞ்சனக்கல்.



வலை = மால், கருவி, கண்ணி, குபினி, சாலம், தடம், அநாயம், அனுயம், குலாயம், கொக்கரை, சாலகம், வாகுரம், குரும்பம், கூடயந்திரம், மீன் முதலியவைகளைப் பிடிக்கும் வலை.

வாலை = பெண், இளைது, சுத்தம், ஓர்சத்தி, பன்னிரு வயதுப்பெண், திராவகம்வடிக்கும் பாத்திரம்.

விலை = நொடை, அறுதி, பணம், கிரயம், நோட்டம், விபணம், விற்றல், விக்கிரயம்.

வேலை = கவை, கரை, நோய், பணி, பனி, பாடு, வேளை, எல்லை, கடல், கவ்வை, காலம், தொழில், பணம், பொழுது, கம்மம், கருமம், காறுபாறி, சேவகம், மணியம், கடற்கரை, செய்பொருள், தொழிற்பாடு, பிரவாகம், புனற்றிரை, விஞ்ஞானம், அவமிருத்து, இளைப்பாற்றி, நிகழ்காலம், கயிங்கரியம்.

ஆல் = பூதம், ஆமெனல், பூதவம், அசைச்சொல், ஆலமாம், பாண்டீரம், ஆலென்னேவல், உபசித்திரை, ககவசுகம், மூன்றனுருபு, கார்த்திகைமீன், விருகற்பாலம், துவர்பத்தினொன்று.

கல் = சிலை, பொறை, மலை, உலம், கல்லு, கிராவை, குண்டு, சையம், தாரம், உபலம், கிராவம், கெளிதம், துறுகல், செங்கல், பாடாணம், பாஷாணம், அரதனம், உபலநாடி, காவிக்கல், கிராவணம், குட்டிலம், பாருகம், பெருங்கல், இரத்தினம், பிசஸ்தரம், மலைப்பிஞ்சு, கல்லென்னேவல், விடந்தீர்க்குமணி, அருவியின் ஒலிக்குறிப்பு.

கால் = அடி, உடை, காலு, சொரி, தாள், தூண், நடை, நுனி, முளை, முழை, வடி, வழி, அளவு, இடம், இருள், உருளை, கழல், காம்பு, காற்று, காலம், காலன், சலன், தரம், பதம், பாதம், மகன், வநம், வலிமை, அங்கிரி, அமிசம், ஒக்காளி, கொப்பளி, சரணம், சலனம், தேருருள், பூந்தாள், முக்காலி, இந்துப்பு, ஊன்றுகோல், கல்லியம், காற்பங்கு, குறுந்தறி, செருப்படை, தாங்குகால், நாலினொன்று, மரக்கால், வாய்க்கால், வாதரோகம், அதமாங்கம், கையூன்றுகோல், சத்திகுன்மம், படர்வாதம், அவர

காத்திரம், இரத்தக் கலப்பா முறவு, நட்டுவைத்த கொம்பு, நூற்றுநாற்பதினைக்கொண்ட அகலம், (உ-ம்) ஊர்க்காணி வந்த பொதும்பர், பஞ்சபூதி யத்தொன்று, புடவைஅகலத தின் கால், அக்ஷரங்களின் கால்.

கீல் = கிசில், சந்து, நுண்மை, பிணையல், பொருத்து, கதவின்கீல், வண் டிக்கீல், அக்கினி வல்லபம்.

கோல் = வருத்தம், பஞ்ச லோகம், கொல்லென்னேவல்.

கோல்=தடி, அம்பு, புள்ளி, இலந்தை, காண்டப், துலாராசி, தூண்டில், தெப்பம், அளவுகோல், ஊன்றுகோல், எழுது கோல், துலாக்கோல், செங் கோல், கோலென்னேவல், மாக்கோல், யாழினரம்பு, அஞ்சனக்கோல், குதிரைச் சம்மட்டி.

சால் = மிகுதி, நீர்ச்சால், படைச்சால்,சாலென்னேவல், தண்ணீர் மொள்ளும் பாத்தி ரம்.

சில் = சில, உபதி, அற்பம், வட்டம், ஆரவாரம், தலைப் பணி, சிலைச்சில், வட்டமா னது, ஒலிக்குறிப்பு, கண்ணு டிச்சில், மூக்குக்கண்ணுடி- தேர்-பண்டி முதலியவற்றின் உருள், வட்டமான தகட்டணி.

சீல் = முத்திரை.

சுல் = வெள்ளி.

சூல் = சூலம், முட்டை, கருப்பம், தெரிநிலை வினைப் பகுதி, குதிரை முதலிய வற் றின் மெய்யுறை.

செல்=இடி, வேல், மேகம், கறையான், கையொப்பம், உண்டியற்சீட்டு, செல்வம், செல்லென்னேவல்.

சேல் = கயல்.

சோல்=அறை,இசை,உரை, கள், கதை, கரை, காதை, கீர், சீர், தோல், நெல், நுலை, நொடி, பணி, பறை, பாணி, மறை, மொழி, வாணி, விளு, இயம், உத்தி, குயில், கூற்று, செப்பு, பதம், பயில், புகழ், பேச்சு, வாக்கு, வாய்மை, பாட்டு, பாரதி, புகல், அசைப்பு, இசைப்பு, கட்டளை, கிளப்பு, கூற்றம், தோற்றம்,பனுவல், நிகாதம், புகறல், மாற்றம், வார்த்தை, விளம்பு, நுவர்ச்சி, நெற்கதிர், பகர்ச்சி, வாக்கியம், உறுதிச் சொல், எழுத்தினேசை, மங் கல மொழி, செங்நெற்கதிர், சொல்லென்னேவல், எழுத்தி னேசைச்சொல்,பெயர்ச்சொல் முதலியன.

தால் = தாலு, தாலாட்டு, பிள்ளைக்கவி யுறுப்பினொன்று,

தில் = விழைவு, காலம், ஒழியிசை, அசைச்சொல்.

தேல் = கலாதி, தெல்லு, அஞ்சல், அஞ்சலிடம், நெடும் பாத்தி, ஓர்விளையாட்டு, நெடுங்கிடங்கு.

தொல் = பழமை.

தோல் = உரி, சொல், தனு, தொலி, யானை, அதள், அழகு, உரிவை, செதில், திருதி, தொக்கு, தோல்வி, பச்சை, புறம், புறணி, புனிறு, பூட்கை, போர்வை, வக்கு, ஒலியல், சருமம், சர்மம், சன்மம், வடகம், வார்த்தை, அபசயம், உரோமபூமி, தோற்பரிசை, தோற்பலகை, கிருத்திமம், தோற்கேடகம், தோற்படலம், சீரவரணம், தோலென்னேவல், எண்வகை வனப்பினுளொன்று, தோலாற் செய்த கேடகம், விதையின் மேற்றோல், பிரயோசன மில்லாதது, வாசகத்தினோருறுப்பு.

நல் = ஏற்ற, நல்ல, மிகுதி.

நால் = நாலென்னேவல், நான்கு.

நீல் = காற்று, நீலம், வாதம்.

நூல் = இழை, கணி, துறை, எற்று, கல்வி, தந்து, தொடர், பாசம், பூணூல், ஆரிடம், ஆகமம், ஆண்குறி, ஆலோசனை, எண்ணம், எண்ணல், தாலிநூல், பனுவல், பிடகம், அதிகாரம், உற்சாகம், ஏற்றநூல், கல்விநூல், சாஸ்திரம், சூத்திரம், தந்திரம், நூலென்னேவல், நுண்குறி, பஞ்சிநூல், பொருத்தனைநூல், குறியைப்பற்றிய நரம்பு, நாடகத்தமிழ் நூல்களுளொன்று.

நெல் = சாலி, சொல், வரி, வாகை, யவம், விரிகி, விரீகி, ஓரளவு, ஓர்பயிர், நெற்பயிர்.

பல் = நகை, பல, எயிறு, துசம், பல்லு, மூரல், கருக்கு, தசனம், தட்டம், தந்தம், துவிசம், தந்தசம், ஒளிக்கடல், ஆயுதக்கரு, சோலையினருகு, நங்கூரப்பல், நங்கூரநாக்கு, வெள்ளைப்பூண்டு முதலியவற்றின் பல்.

பால் = சுதை, சுவை, பாகு, பாதி, மது, விதி, ஊழ், அமுது, இடம், உரிமை, கடமை, கீரம், குணம், சூமம், க்ஷீரம், திக்கு, தோகம், பகுதி, பங்கு, பயசு, பயம், பயன், பலன், பாச்சி, பேவம், வெண்மை, அமிர்து, அமிழ்து, அமுதம், இயல்பு, ஐம்பால், சுகிதம், சோமசம்,

துத்தம், பக்கம், பயசம், பாயசம், வரணம், அமிர்தம், அமிழ்தம், அவதோகம், ஏழனுருபு, ஔதசியம், பயோதரம், பாலைப்பண், பாலைநிலம், பால் வெண்மை, மரப்பால், முலைப்பால், அம்மைப்பால், பசுவின்பால், மரமுதலியவற்றின்பால், பஞ்சகௌவியத்தொன்று.

புல் = வை, களை, பூரி, புலி, இழிவு, என்பு, கல்வி, பதவு, பயிர், புதல், புல்லு, புன்மை, அற்பம், கசபம், திரணம், திருமணம், அனுடநாள், அனுஷநாள், பனைமரம், புணர்ச்சி, பசவ்வியம், புன்மைநிறம், புல்லென்னேவல், புறக்காழ்மரம், அனுடநட்சத்திரம்.

பூல் = பூலா, ஒருசெடி, புல்லாந்தி.

பொல் = பொல்லு.

போல் = உவமை, பதர், பொந்து, மூங்கில், போலென்னேவல்.

மல் = வலி, வளமை, பெருகல், திருமால்கூத்து, கூத்தினோர்விகற்பம்.

மால் = வலை, வீடு, கருமை, காற்று, பழமை, புதன், பெருமை, மேகம், வெறுப்பு, வேட்டை, கண்மணி, கொட்டில், புகர்நிறம், மயக்கம், கம்மாளர் கருவியினொன்று.

மேல் = மீ, இனி, நேர், பின், மிசை, மீது, இடம், நேமம், மீமிசை, மேற்கு, முன்னே, மேன்மை, வலம், அகலம், அதிகம், ஆகாயம், உப்பால், உம்பர், உயரம், சரீரம், உயர்ச்சி, ஏழனுருபு, மேற்புறம், ஊர்த்துவம், இனியென்பது, வருங்காலம், ஏழாம் வேற்றுமை உருபு.

வல் = மேடு, வலி, கச்சு, சீக்கிரம், சூதாடு கருவி.

வால் = தோகை, இளமை, தண்டை, மிகுதி, வாலதி, வெண்மை, பெருமை, உலோமம், சுத்தம், பக்கம், புச்சம், வாலகம், வேசகம்.

வில் = ஒளி, சிலை, தடி, தனு, வேணு, சாபம், தண்டு, தவர், தனுசு, தனுர், திரணம், திருணதை, திருணம், துருணம், துரோணம், துலாசம், மூலநாள், கார்முகம், கொடுமரம், கோதண்டம், தண்டாரம், நகமுகம், வாஞ்சனம், சிந்துவாரம், தனுகாண்டம், வில்லென்னேவல், வீரதராசநம், மூலநட்சத்திரம்.

வேல் = செல், அயில், எஃகு, கைவேல், சத்தி, சூலம், அரணம், எஃகம், ஞாங்கம், குந்தம், விட்டேறு, மூங்கில், தோமரம், விட்டேறி, உம்பிடி, கப்பணம், சத்திரம், வேலாயுதம், வேலமரம், ஆயுதப்பொது, விட்டேறணம்.

ஆவ = ஆவன.

ஈவ = கொடுப்பன.

உவ = தெரிநிலைவினைப் பகுதி.

சுவ = சொந்தமான, சுவஸ்தானம்.

தவ = மிக, ஓர் உரிச்சொல்.

பவ = ஒரு வருடம்.

அவா = ஆசை, வீண், அவவு, திகரம், பொச்சம், விநோதம், வினோதம், இறங்குகை, இறங்குதல், அவாவென்னேவல், ஆசைப்பெருக்கம்.

ஆவா = அதிசயக் குறிப்பு, இரக்கக் குறிப்பு.

உவா = யானை, இளமை, கடல், நிறைவு, பூரணை, அமாவாசை, இளையோன், யௌவனன்.

காவா = காட்டு மல்லிகை.

குவா = ஓர் கிழங்கு.

கோவா = கோவை, ஓர் பட்டினம்.

சிவா = கடுக்காய், கீழ்காய் நெல்லி, வன்னி.

திவா = திவம், பகல்.

துவா = துவி, இரண்டு.

அவி = சோறு, தேவருணவு.



ஆவி = புகை, அரூபி, ஆன்மா, உயிர், குளம், நீராவி, பிட்டு, வாசனை, சுவாசம், தடாகம், புகையிலை, வெப்பம், உயிர்ப்பு, உயிரெழுத்து, கொட்டாவி, விடுவென்னேவல், நீரிலெழுமாவி, மலினமுகம், தேவதிரீத்துவத்தினொன்று.

கவி = பா, பாடல், பாட்டு, பிரமா, குரங்கு, சூரியன், நாற்கவி, கவி பாடுவோன், புலவன், கடிவாளம், சுக்கிரன், கவியென்னேவல், ருக்ஷயன்மகன், இக்ஷ்வாகு தம்பி, சுக்கிரன் தந்தை, பூனைக்காலிச்செடி.

காவி = கள், கசனை, காஷாயம், காவிமண், செம்மண், பற்காவி, மிதப்பு, கருநொச்சி, காவிக்கல், ஓர்வகைமண், கருங்குவளை, அவுரிமருந்துண்டை.

குவி = கூட்டு, திரட்டு.

கூவி = கூஉய், அழைத்து.

சாவி = சப்பி, திறப்பு, சப்பட்டை, திறவு கோல்.

சேவி = காது, கேள்வி, சிரவம், கேள்விமூலம், பஞ்சப்பொறியினொன்று.

சேவி = கும்பிடு, வணங்கு, வேலைசெய், தண்டம் சமர்ப்பி.

தாவி = சேர்த்து, பிடித்து, ஒரு வினையெச்சம்.

தேவி = இல், காளி, பாரி, மனை, அரசி, உரிமை, களம், காதலி, காந்தை, தலைவி, தாரம், துர்க்கை, தேவதை, நாயகி, பன்னி, மனைவி, இல்லாள், துர்க்கை, பார்வதி, முதல்வி, வல்லவை, இல்லவள், குடும்பினி, சீதேவியார், தேவப்பெண், நாயகச்சி, நாயகத்தி, மனையாட்டி, விருந்தனை, களத்திரம், பதுமினிப் பெண், வாழ்க்கைத்துணை.

நாவி = சாலி, நாபி, மறுவி, ஊமத்தை, கத்தூரி, சுசுந்தரி, பூதிசாரிகை, ஒருமருந்து, கத்தூரிமான், மிருகபாலிகை, மிருகமதம், புழுகுபூனை, வனவாசகம், கத்தூரிப் பூனை, கத்தூரிப்பிள்ளை, கஸ்தூரிமிருகம், கத்தூரிமிருகம், ஒருவகைமரக்கலம்.

நீவி = சீலை, மெழுகி, வனநெல், கொய்சகம்.

பவி = இடியேறு.

பாவி = பாபி, பேதை, கருமி, கன்மி, சுபாவி, தீயோன், உள்ளது, பாவவாளி, பாபாத்துமா, பாவாத்துமா, பாவியென்னேவல், அக்கிரமஸ்தன்.

புவி = பூமி.

வவி = வேதமுத்திரை தரியாதவன்.

வாவி = இஞ்சி, குளம், கயந்தலை, பல்லவம், வினையெச்சம்.

வெளவி = மான்.

ஆவு = குன்றி.

ஈவு = கொடை, சொரிவு, வரம், பாசிதம், உபாதானம், கொடுக்கப்பட்டது, பிரித்துக் கொண்டபேறு.

ஏவு = அம்பு, எழுப்பு, தூண்டு, வருத்தம், ஏவென்னேவல், அனுப்புந்தன்மை.

காவு = பலி, ஓர்மந்திரமை.

கேவு = வெண்கடுகு.

சாவு = சா, வீ, பேய், மாரி, வீவு, அறுதி, இழவு, போக்கு, மடிவு, மாய்வு, யோகம், விளிவு, அந்தம், இறப்பு, உலக்கை, உலப்பு, கங்கம், சாக்காடு, பிசாசம், போக்காடு, மரணம், மரதம், விகதம், வீதல், நிரி

யாணம், பஞ்சதம், அரிமாலினம், நெடுந்துயில்.

சீவு = கோது, ஒருபுல், செதுக்கு.

தாவு = பிடி, தாக்கு.

தீவு = சுவை, இனிமை, தீபம், கண்டம், துவீபம், தீய்தல், இடைக்குறை, தூரதேசம், பயோகடம், தீவாந்தரம், தீவாந்திரம், ஆற்றிடைக்குறை, கடலிடைக்குறை, கடலுள் திடர்.

தேவு = எடுத்துக்கொள்.

நாவு = நா, தாரை, தாலு, நாபி, தாரம், தாலம், நாக்கு, ககுத்து, சிங்குவை, சிக்குவை, ஓர் மருந்து, கத்தூரி மிருகம்.

நூவு = எள்.

நோவு = நோய், சரம், நோசல், படர், மெலிவு, மஞ்சள், வருத்தம்.

பாவு = பா, பாவென்னேவல்.

மாவு = சத்து, பிட்டம்.

மேவு=ஆசை,மேவென்னேவல்.

வீவு = சாவு.

வேவு = ஒற்று, வேதல், வேவென்னேவல்.

வைவு = ஏச்சு, சாபம்.

அவை = அவ்,சபை,சவை, கூட்டம், புலவர், அம்பலம், அவையென்னேவல்.

இவை = அஃறிணைப் பன்மை, இஃது, இது.

உவை = உவ்.

ஔவை = ஔவையார், தவப்பெண், தாய், திருவள்ளுவர் சகோதரி.

கவை = காடு, தேவை, வேலை, அகில், கவர், கோட்டை, ஆயிலியம், கவர்வழி, மரக்கப்பு, எள்ளிளங்காய்.

குவை = மேடு, குப்பை, கூட்டம், திரட்சி,

கூவை = கூகை, ஒரு கிழங்கு.

கோவை=நிறை,கொவ்வை, வரிசை, ஒழுங்கு, கோத்தல், அணிவடம், கோத்தமாலை, ஓர் பிரபந்தம், ஒரு நகரம்.

கௌவை = கள், காரியம், சத்தம், துன்பம், கலக்கம், பழிச்சொல், ஆயிலிய நாள், எள்ளிளங்காய்.

சவை = கூட்டம், புலவர், சங்கம், அம்பலம்.

சிவை = உலை, நரி, வேர், ஆணரி, மூக்கு, ஓரளவு, துர்க்கை, பார்வதி, அங்கிரசன் பாரி, நெல்லிக்காய், புத்தன் தாய், உலைத்துருத்தி.

சுவை = சுதை, தீவு, இனிமை, உருசி, இரசம், இரதம், இன்பம், பாற்பசு, உருசிகரம், சித்திரைநாள், ஓரலங்

காரம், சுவையென்னேவல், ஐம்புலத்தொன்று.

சேவை = செம்மை.

சேவை = ஊழியம், வழி படுதல்.

சைவை = அகிலன் பாரி.

சோவை = நீர்க்கோவை.

துவை = ஒலி, துளசி, இறைச்சி, பிண்ணுக்கு, புளிக் கறி, துவையென்னேவல், பருகுதற்குரியன.

தேவை = வேண்டும், அவசரம், தவக்கம், வேண்டுவது, அகத்தியம், வேண்டுந் தன்மை, இராமநாதபுரம், வேண்டப்படுவது.

தௌவை = தாய்,மூதேவி, அக்காள்.

நவை = குற்றம், இகழ்ச்சி.

நாவை = படைவாள், கலப் பையின் நா.

பாவை = பெண், பதுமை, மதில், சித்திரப்பாவை,இலக் குமிக் கூத்து.

பீவை = நீர்.

பூவை = கிளி, பெண், குயில், காயாமரம், நாகணவாய்ப் புள்.

யாவை = எவை, எவன், என்ன, அஃறிணைப் படர்க் கைப் பன்மை வினு.

இவ் = இவை, சுட்டுச் சொல்.

பிழா = பட்டை, கொள் கலம், வெண்கலம், ஓலைக் கலம், தட்டுப்பிழா, நீரிறைக் குங் கருவிகளிலொன்று.

விழா = விழவு, சிறப்பு, திருவிழா, மன்மதம், வினை முற்று, வினையெச்சம், மங்க லச் சடங்கு.

அழி = அழிவு, வைக்கோல், இரக்கம், அழியென்னேவல்.

ஆழி = நுனி, கடல், கரைப் பொது, வண்டி, தேருருளை, வட்டம், மோதிரம், யாணைக்கை.



இழி = இகழ்வு, இழியென் னேவல், கீழ்மை.

உழி = அளவு, இடம், பக் கம், ஏழனுருபு.

ஊழி = பூமி, விதி, உறை காலம், ஓர் பிசாசம், நெடுங் காலம், பிரமனுயுள், யுக முடிவு.

ஒழி = ஒழியென்னேவல்.

கழி = ஊன், கோல், கம்பு, கடல் காம்பு, கயிறு, காயல், கானல், கொம்பு, துண்டி, புகுடி, மிகுதி, முகம், உப் பாறு, நூற் கழி, முரம்பு, உப்பளம், சிறுகம்பு, செம்மெழுகு, நூற்சுருள்,



யாழினரம்பு, மரக்கொம்பு, கழியென்னேவல், மெழுகுவர்த்தி, நுகத்தொளைக்கழி, யாழினை யிசைக்குங் கருவி.

காழி = ஒர் தேவதை, சீர்காழி.

கிழி = கீழுடை, கீற்று, முடிப்பு, நிதிப்பொதி, பொட்டணி, எழுதுபடம், கிழிந்த துண்டு, கிழியென்னேவல்.

குழி = கிணறு, குளம், வயிறு, கிடங்கு, தல்லம், திரண்டு, நீர்நிலை, பதங்கு, பள்ளம், பிரேதக்குழி, கனவடிக்குழி, குழியென்னேவல், ஒருகோல் நீளமும் ஒருகோலகலமுங் கொண்ட தரை, சதுரஅடிக் குழி, பன்னீரடிச் சதுரக்குழி.

கோழி = ஞானி, குருகு, சாவல், சேவல், புச்சி, விட்டி, வெருகு, உக்கம், உறையூர், சூலிகம், தாட்படை, வசரம், வாரணம், கலாவிகம், காலாயுதம், கிரகவாகு, குக்குடம், செல்லியம், தாமிரசிகி, பதாயுதம், சரணாயுதம், சிகண்டிகம், ஆண்டலைப்புள், பஞ்சபட்சியினு ளொன்று, கோழித்தலைக் கந்தம், பன்றிக் கிழங்கு.

சுழி = விந்து, மூர்க்கம், கபடம், இலக்கணச்சுழி, உரோமச்சுழி, சுழியென்னேவல், நீர்ச்சுழி முதலியன.

சூழி = சுனை, உச்சி, கடல், குளம், உச்சிக்கொண்டை, யானைமுக படாம்.

ஞாழி = வள்ளைக்கொடி.

தாழி = சாடி, அகளி, குடம், சிவதை, தளம், பதலை, அகளம், பாண்டம், அரிதாரம், பரணிநாள்.

தோழி = எடி, ஒரை, சகி, எலா, சேடி, தாதி, நேசி, பொறு, அன்னை, இகுளை, காதலி, சிலதி, துணைவி, பாங்கி, இணங்கி, சினேகிதி, சிநேகிதி, தேவனம், மித்திரை.

நாழி = படி, கொத்து, நாழிகை, நானாழி, வட்டி, உட்டுளை, ஒருபடி, குஞ்சம், நிரப்பு, உட்டுளை, பூரட்டாதி, அளக்கும் நாழி, அம்பறாத் தூணி, உட்டொளைப்பொருள், ஒரு முகத்தளவு கருவி, பூரட்டாதிநாள், பூரட்டாதி நட்சத்திரம்.

பழி = குறை, பொய், நிந்தை, தீவினை, குற்றம், பழிப்பு, விரோதம், வெஞ்சம், பொல்லாங்கு, பழியென்

னேவல், வயிராக்கியம், தெரி நிலை வினைப்பகுதி.

பாழி = அளை, உரை, ஊர், குகை, கெபி, பாழ், புடை, வலி, கடல், பதம், பெருமை, அகலம், கிராமம், சயநம், ஆகாயம், முழைஞ்சு, சிறு குளம், பகைவரூர், மேதவர் கோயில், தேவர் கோவில், முனிவர் வாசம், மருதநிலத் தூர், விலங்கின் படுக்கை.



பிழி = கள், தேன், பிழி யென்னேவல்.

பூழி=புழுதி, பராகம்,குழை சேறு, சேற்றிற் குமிழி.

முழி = விழி, கண.

மூழி = சோறு, குளம், அகப்பை, துடுப்பு, மத்து.

மேழி = கலப்பை, கலப்பை யின் கைப்பிடி.

மொழி = சொல், வார்த்தை, மொழியென்னேவல், பாஷை.

வழி = ஆறு, கடை, கதி, கால், கிறி, சரி, தாரி தாரை, துறை, தெரு, நடை, நெறி, பரி, பின், வதி, வரி, வாரி, அடைவு, அதர், இடம், இடவை, இயவு, இயவை, கடவு, கடவை, கட்சி, சுரம், செலவு, தடம், திறவு, தூம்பு, தோரணி, நடவை, படர், பதம், பதவி, பதவை, பழமை, பாட்டை, புலம், போக்கு, மகன், மரபு, மார்பு, முறைமை, வகம், வகிர், வக்கு, வட்டை, வயவை, வளம், வனம், வெட்டி, அத்தம், அயனம், ஏகபதி, காரணம், செப்பம், தட்டம், தரங்கு, திரட்சி, துவாரம், பட்டம், பத்ததி, வகுந்து, வட்டில், வரம்பு, வழிபாடு, வாட்டம், வியாமம், அடிப்பாடு, அத்துவம், உந்தரம், ஒழுக்கம், கண்டாயம், பிரகாரம், பிரசரம், மார்க்கம், ஏழனுருபு, தோரணிக்கம், வருத்தனம், வழியென்னேவல், மக்கட் பன்மை.



வாழி = வாழிய, வாழ்த்து, இடைச்சொல்.

விழி = கண், முழி, கண் மணி, விழியென்னேவல்.

வீழி = விழுது, ஓர்செடி, கசித்தி, தாடகம், திருவீழி மிழலையென்னுந் தலம்.

அழு = அழுதல், அழுவென் னேவல்.

உழு = உழுவென்னேவல்,

பிள்ளைப்பூச்சி.

எழு = உருக்கு, கம்பம், வளைதடி, ஓர் மரம், உழலை மரம், எழுவென்னேவல்.

ஏழு = ஓரெண்.

உறல் = அடைகை, அடைதல், உறவு, உறுதல், கிட்டல், பரிசம், வருதல், பொருந்தல்.

உரவர் = அறிஞர், உரவோர், வலியோர், நாகர், சமணர், மூத்தோர், அறிவுடையோர்.

உறவர் = உறவோர், சுற்றத்தார், நண்பர்.

உரவு = வலி, வலிமை, அறிவு, பரத்தல், மிகுகை, மிகுதி, விஷம், மனோபலம்.

உறவு = நட்பு, எறும்பு, ஐக்கம், ஒற்றுமை, சினேகம், சுற்றம், சேர்க்கை, சம்பந்தம், பொருத்தம், உற்ற சமயம்.

உரி = களை, தோல், உரிய, கழற்று, அரைப்படி, உரிச்சொல், மரப்பட்டை, கொத்துமல்லி, உரியென்னேவல்.

உறி = தூக்கு, பண்டம் வைக்கும் பொருட்டுத் தொங்கவிடும் உறி.



உரிஞ்சுதல் = உரினுதல், உரிஞ்சல், தேய்த்தல், வழுந்தல்.

உறிஞ்சுதல் = உறிதல், உறிஞ்சல், உறிஞ்சுதல், ஆக்கிராணித்தல், உள்ளேயிழுத்தல், உள்ளே வாங்குதல், மூக்கால் உறிஞ்சுதல், வாய்க்குள்ளிழுத்தல்.

உரிதல் = கழலல், கழற்றல், முளைத்தல்.

உறிதல் = உறிஞ்சுதல்.

உரு = உள், கரு, கலை, நோய், தோணி, அட்டை, அழகு, உடல், கோபம், நிறம், நீண்ட, பதுமை, பருமை, பெரிய, வடிவு, வியாதி, அச்சம், கப்பல், மீதோற்றம், வடிவம், வெப்பம், அதிகமான உருப்படி, எலுமிச்சை, சன்னதம், மரக்கலம், விக்கிரகம், வைக்கோற் புரி, ஜெபத்தின் உரு, விலையுயர்ந்தது, உருத்தலைச் செய்யென்னேவல், வெப்பம், மேன்மை, பாடல், மிகுதி, அகலம்,

உடம்பு.

உறு = மிகுதி, மிகுதியான, உருவென்னேவல்.

உருக்கல் = வாட்டல், கரைத்தல், கெடுத்தல், வருத்தல், உருக்குதல், உருகச்செய்தல், தீயிற்கரைத்தல்.

உறுக்கல்=கோபப், அதட்டல், உறுத்தல், தண்டித்தல், கடத்தல், குதித்தல், சினக்குறிப்பு, பயமுறுத்தல், கடிந்துகொள்ளல், குரூரமாய்ப்பேசல்.

உருத்தல்=கோபம், மிகுதி, கோபித்தல், தோற்றுதல், முளைத்தல், சினக் குறிப்பு, வெளிப்படுதல், கன்மம் விளைதல், சினக்குறிப்புக்காட்டல்.

உறுத்தல்=அமைத்தல், தாக்கல், நாட்டல், ஒற்றுதல், பயத்தல், வருத்தல், உண்டாக்கல், உறுவித்தல், சேர்த்தல், வருவித்தல், ஏற்படுத்தல், நினைப்பித்தல், மனதிலுறுத்தல்.

உருபு = நிறம், உருவம், இடைச்சொல், வேற்றுமையுருபு.

உறுபு = மிகுதி, செறிவு, பாலையாழ்த்திறம்.

உருப்பு=தீ, மிகுதி, உரும்பு, கொதிப்பு, பூரணம், வெப்பம்.

உறுப்பு = உடல், உறுதி, பங்கு, மிகுதி, அங்கம், அடுக்கு, துறுவல், அடையாளம், அவயவம், நெருக்கம், மரக்கொம்பு, அங்கலக்ஷணம், மேல்வரிச்சட்டம், காணியாச்சிப் பத்திரம்.

உருவல் = உருவுதல், காதணியினென்று.

உறுவல் = துன்பம், உறுவென்னு முற்று.

உரை = ஒலி, சொல், தேய், பேசு, பொன், மொழி, விடை, துணிவு, தேய்வு, பேச்சு, சொற்பயன், தேய்மானம், புகழ், வேதமொழி, உரையென்னேவல், மாற்றறியுமுறை, வியாக்கியானம், ஆசிரிய வசனம், ஆகமப்பிரமாணம், உயர்ச்சி.

உறை = இரு, உரை, செறி, துளி, மழை, இறுகு, இடம்,

காரம், நீளம், பெருமை, உயரம், ஒழுகல், ஓரளவு, கௌசனை, பண்டம், பெய்யுறை, மருந்து, வாழ்நாள், சஞ்சரி, உயர்ச்சி, உவர்நீர், கிணற்றுரை, கூடு, பொருள், மருந்து, உறைதல், உறைப்பு, இலக்குமி, உணவு, ஆயுதப்

போர்வை, மரக்கால், மழைத்துளி, வாசஞ்செய், வெண்கலப், பாவிடுபிரை, இருப்பிடம், உறையென்னேவல், விலங்குணவு, பாம்பின்விஷப்பை, ஆடையழுக்ககற்றுநீர், இலக்கக் குறிப்புளொன்று, உறைதல்.

உரைதல்=உரைவு, உரைத்தல், உரையல், தேய்தல்.

உறைதல் = உறைவு, செறிதல், இருத்தல், ஒழுகுதல், கார்த்தல், வசித்தல, சஞ்சரித்தல், பால் முதலியன இறுகுதல், நிலம்.

உரைத்தல் = ஒலித்தல், சொல்லுதல், தேய்த்தல், கற்பித்தல், பூசுதல்.

உறைத்தல் = எரிதல், ஒத்தல், கார்த்தல், தாக்கல், மிகுதல், அழுந்தல், உதிர்தல், ஊன்றுதல், துளித்தல், அதட்டுதல், உறுத்துதல், அவமானித்தல், சிந்துதல்.

உரைப்பு = உரைக்கை, தேய்ப்பு, சொல்லுகை.

உறைப்பு = எரிவு, கடுமை, கலப்பு, கூர்மை, கொடுமை, காரம், பதிவு, உக்கிரம், தாக்குகை, அழுத்தம், மழை.

ஊரல் = ஈரம், தினவு, தேமல், பசுமை, ஊருதல், ஊர்தல், உரிஞ்சல், கிளிஞ்சில், நகருதல், நகர்தல், காய்ந்துவருகிறபுண், குளுவையென்னும் பறவை.

ஊறல் = சாறு, ஊற்று, ஊறுகை, தினவு, ஊறுதல், கசிதல், களிம்பு, நீரூற்று, வருவாய், காய்ந்த பச்சை, மருந்திலூறல், மருந்தின் சாரம், பஞ்சலோகக்கலப்பு, சருமத்தின் மேலுண்டாகும் ஒருநோய்.

ஊரு = தொடை, அட்டை, அச்சம்.

ஊறு = கசி, சொலை, தீமை, ஊறுகை, காயம், நாசம், நீரூறு, இடையூறு, உடம்பு, தழும்பு, தீண்டல், தீண்டுகை, துன்பம், வல்லூறு, ஊறென்னேவல், காய்முதலியவூறு, பால்முதலியனசுர, காயத்திலூன்வளர், மெலிந்த வுடல்தேறு.

ஊருதல் = ஏறுதல், ஊர்தல், செல்லுதல், தவழ்தல், பரத்தல், தினவுறல், நகருதல், செலுத்துதல்.

ஊறுதல் = கசிதல், நனைதல், வாயூறுதல், சாரமேறுதல், நீர்பெருகுதல், மெலிந்த வுடல்தேறுதல, மாமிசஞ்சேர்ந்துப் பிடித்தல், பலவழியினும் பொருள்வந்தடைதல்.

எரி = கேட்டை, நரகம், நெருப்பு, இடபராசி, பிரகாசம், அக்னிதேவன், கந்தகம், கார்த்திகை, புனர்பூசம்.

எறி=அறை, உதை, எறிகை, குத்து, தள்ளு, வீச்சு, வெட்டு, அலையடி, அலைவீசு, அடிக்கை.

எரிதல் = எரியல், அழற்றல், அனற்றல், முதிர்தல், பிரகாசித்தல், சுவாலித்தல், துயரமடைதல், தீச்சுவாலித்தல், வெந்தற்றுப்போதல்.

எறிதல் = வீசல், எறிவு, அறைதல், சீறுதல், பொழிதல், வீசுதல், தட்டல், தள்ளல், வெட்டல், அடித்தல், அறுத்தல், அழித்தல், உதைத்தல், ஊறுபடுதல், ஒட்டுதல், குத்தல், கொட்டுதல், செறித்தல், முறித்தல், தெறித்தல், வெல்லுதல், ஒதுக்கிவிடுதல், கொள்ளையிடுதல், நுகர்வித்தல், அலையெறிதல், உண்ணாமல் நீக்கிவிடுதல், இரையைப்பாய்ந்தெடுத்தல்.

எரித்தல் = எரிவு, எரியச்செய்தல், சீரணிக்கச்செய்தல், தீயால் வெந்தழியச்செய்தல்.

எறித்தல் = தைத்தல், உறைத்தல், பரத்தல், ஒளிவீசுதல், வெயில் காய்தல், வெயில் காலல்.

எரிப்பு = பொறாமை, எரித்தல்.

எறிப்பு = கோடை, பிரகாசப், ஒளிசெய்தல், விம்பித்தல், வெய்யிலெறிக்கை.

ஏரல் = கிளிஞ்சில், சமுத்திரச்சுண்டி.

ஏறல்=ஏறுதல், கிளிஞ்சில்.

ஒருத்தல் = யானை, யானை முதலியவற்றின் ஆண், விலங்கேற்றின் பொது, ஒருசார் விலங்கினாண்.



ஒறுத்தல் = அடக்கல், அலைத்தல், அழித்தல், கடிதல், இகழ்தல், ஒடுக்குதல், குறைத்தல், தண்டித்தல், வருத்துதல், வெறுத்தல், ஊனமாதல், நோய்செய்தல்.

கரகரத்தல் = ஒலிக்குறிப்பு, பரிசக்குறிப்பு, ஊறுதல், அலைக்கழித்தல், அரிகண்டப்படுத்தல்.

கறகறத்தல் = ஒலிக்குறிப்பு, சீக்கிரக்குறிப்பு, அரிகண்டப்படுத்தல், தொண்டையறுத்தல்.

கரகரப்பு = கார்ப்பு, அலைக்கழிப்பு, சருக்கரையூறு, தினவு, தொண்டையரிப்பு, ஓயாது வேண்டுகை.

கறகறப்பு = ஒலிக்குறிப்பு, மனஸ்தாபம், மனங்கொள்

ளாமை, தொண்டையறுப்பு.

கரளை = கறளை, வளர்தலின்மை, வளராதவன், கொத்துக் கரண்டி, வீணைத்தண்டு, பாவட்டை, கரும்பு முதலிய துண்டு.

கறளை = கருளை, குள்ளன், ஓர் மரம், கட்டிவகை, பருக்காத காய், வளராத மர முதலியன.

கரத்தல் = ஒடுக்குதல், சங்கரித்தல், கொடாமை, திருடல், ஒளித்தல், மறைத்தல்.

கறத்தல் = உறத்தல், கவருதல், பால் முதலிய பிதுக்கல்.

கராளி = கராளம், தீக்குணம், அக்கினி பகவானின் எழுநாக்களில் ஒன்று.

கருளி = குள்ளன், அடங்காமை, கட்டிவகை, அடங்காக் குதிரை, வளர்ச்சியின்மை.

கரி = யானை, கருமை, சாட்சி, நஞ்சு, வயிரம், இருந்தை, கரிந்தது, மரவைரம், கரியென்னேவல், திருட்டாந்தம், கண்ணிடுமை, நெருப்புக்கரி.

கறி=கடி, மிளகு, இறைச்சி, மரக்கறி, ஒரு நாழிகை, கறியென்னேவல், பதார்த்தம்.

கரித்தல்=உறைத்தல், எரித்தல், கார்த்தல், உப்புச்சுவை மிகுதல், உறுத்துதல், குறைகூறுதல், தாளித்தல், உப்புக்கரித்தல்.

கறித்தல் = கடித்தல், புசித்தல்.

கருக்காய் = பதர், இளங்காய், கருக்கல் நெல், பிஞ்சுநெல்.

கறுக்காய் = ஓர் மரம், இளநீர் கயர்.

கருப்பு = அரிது, குறுவிலை, பஞ்சம், குறுவிலைக் காலம்.

கறுப்பு = கறை, அபின், கருமை, கோபம், சினம், வெகுளி, இராகு, கருநிறம், குற்றம், தழும்பு, சினக்குறிப்பு, மனக்குறை, பேய்பிசாசுகள், மீனம்பர்.

கருமுதல் = ஓர் மீன், கருமுரல்.

கறுமுதல் = உறுமுதல், கோபித்தல், சினத்தல், சினக்குறிப்புக் காட்டல்.

கருவம் = சினை, ஓமிரண், கெருவம், கர்வம், கொர்வம், செருக்கு, அகங்காரம்.

கறுவம்=கறு, கெறு, கெறுவம், கோபம், சினம், வெகுளி, ஆங்காரம்.

கருவல் = கருப்பானது.

கறுவல் = கரியது, கரியவன், கருநிறம், சலஞ்சாதித்தல், சினக்குறிப்பு, சினக்

குறிப்புக் காட்டல்.

கரை = அருகு, எல்லை, இடம், கானல், முடிவு, வயல், வரம்பு, வார்த்தை, கரையென்னேவல், கடற்கரை, சீலை விளிம்பு, சீலையின் விளிம்பு.



கறை = இருள், உரல், கடமை, கறள், நஞ்சு, நிறம், உதிரம், களங்கம, கறுப்பு, குடியிறை, குற்றம், இரத்தம், கருங்காலிமரம், மாதவிடாய், மாசு.

காரல் = காறல், காருதல், ஓர் மீன், காந்துதல்.

காறல் = கறப்பு, காறுதல், ஓர் சுவை, கார்ப்பானது, காறற்கொட்டி, கடல்மீன் வகை, ஓர் மருந்துச்செடி.

காரு = சிற்பன், தேவதச்சன், செய்வோன், வண்ணான்.

காறு = கொழு, அளவு, கால அளவு, சலாகை, காலவெல்லை, காறியுமிழ், காறுதல்.

காருதல் = காந்துதல்.

காறுதல் = கறுத்தல், காறியுமிழ்தல், நெய் முதலிய காறுதல், வைரங்கொள்ளுதல்.

காரை = சீலை, பாகல், ஓர் செடி, ஓர் மரம், ஓர் மீன், சுண்ணச்சாந்து, பல்லூத்தை.

காறை = வண்டி, ஓர் ஆபரணம், கழுத்தணியிலொன்று, நிலச்சாந்து, பூஞ்சாறம், வைக்கோல் தாள், வைக்கோல் முதலியவற்றின் காறை.



கிராய் = புற்பொழி, வயிரநிலம், கருஞ்சேற்று நிலம், ஒருவகையான தரை.

கிருய் = புற்காடு, பச்சை நிறக் களிமண்.

கிரி = மலை, பன்றி, பிணையாளி, மருட்பன்றி.

கிறி = பொய், வழி, மாயம், தந்திரம்.

குருக்கு = இக்கிரி, பிரமதண்டுச்செடி, வடலி முதலியன நெருங்கிய தோப்பு.

குறுக்கு = ஊடு, மாறு, குறுமை, இடுப்பு, இடையீடு, விட்டம், சுருக்கம், திரியக்கு, குறுக்கென்னேவல், தடை, விட்டத்தளவு.

குரங்கு = கொக்கு, மந்தி, வளைவு, குரக்கு, கொளுக்கி, வானரம், விலங்கு, குரங்கென்னேவல், முசுமுசுக்கை, விலங்கின்பொது, முசுமுசுக்கைக் கொடி.

குறங்கு=தொடை, குறுகு, கொளுவி, கொக்கி, சினைக் கால்.

குரத்தி = ஐயை, தலைவி, குருவின் மனைவி, குறச்சாதிப் பெண்.

குறத்தி = நிலப்பனை, குறிஞ்சிநிலப் பெண்.

குரவர் = குரு, தந்தை, அரசர், உவாத்தி, மூத்தோர், பெரியோர், குருக்கள்.

குறவர் = வேடர், குறிஞ்சி நில மாக்கள்.

குரவன் = குரு, தந்தை, அரசன், உவாத்தி, பிரமன், மந்திரி, முற்பிதா, மூத்தோன்.

குறவன் = இரதம், குள்ளன், பாதரசம், ஓர் ஜாதியான், குறிஞ்சிநில மகன், பாலைநில மகன், பாசாங்கு பண்ணுகிறவன்.

குரம் = ஒலி, பசு, பாகல், விலங்கின் குளம்பு, குதிரைக் குளப்பு, தருப்பைப்புல், தர்ப்பை, தருப்பை, பாகற்கொடி.

குறம் = குறி, ஓர் ஜாதி, குறச்சாதி, குறத்தி சொல்லுங் குறி, குறத்திப் பாட்டு.

குரவை = ஒலி, கடல், ஒரு மீன், கூத்து, கைகோத் தாடல், பெருஞ்சத்தம், மகளிர் சந்தோஷ ஒலிக் குரவை.

குறவை = ஓர் மீன்.

குருத்தல் = குருப்பித்தல், பெருங்கோபம், தோற்றுதல், வேர்க்குரு உண்டாதல்.

குறுத்தல் = அணுகல், குறுகல், குறைதல், கிட்டுதல், குறுகுதல், சுருங்குதல்.

குருமை = நிறம், பெருமை.

குறுமை = அழகு, சிறுமை, அணிமை, குறைவு, பாவம், குள்ளம், குறுகுகை, சுருக்கம், குறுகிய தன்மை.

குரூரம் = கடுமை, கொடுமை, கொடூரம்.

குறூரம் = கடூரம், கடினம், குரூரம்.

குரை = ஒலி, குதிரை, பெருமை, குளம்பு, இசை நிறை, பரப்பு, நாய் குரை, அசைச்சொல், அசை.

குறை=குற்றம், அரசிறை, காரியம், குறைந்திருப்பது, குறையென்னேவல், சேடம், தரித்திரம், தவறு, நிறை வற்றது, மன்றுட்டு, மிச்சம், வெறுப்பு, குறைபாடு, வறுமை, எஞ்சியது, மனக் குறை, ஊனம், கூறுங்குறை, எஞ்சல், தெய்வக்குறை, சொல்லின் குறை.

குரைத்தல் = ஒலித்தல், குலைத்தல், ஆரவாரித்தல், எழுத்திலா வோசை.

குறைத்தல் = அறுதல், குறைப்பு, அராவுதல், அழித்தல், குறுகுதல், குறைக்குதல், சங்கரித்தல், சுருங்குதல், தறித்தல், வெட்டுதல்.

கூரல் = ஓர் மீன், ஓர் பெருமீன், புள்ளிறகு, பெண்மயிர்.

கூறல் = கூறுதல், நாகபாஷாணம்.

கூரை = இறப்பு, சிற்றில், சிறுகுடில், வீட்டுக்கூரை, வீட்டின் மேற்புரம்.

கூறை = சீலை, கூறைப் புடவை, கூறைச் சேலை, மணவாட்டி யுடுக்கும் புதுப் புடவை.



கெருவம் = கர்வம், கருவம், கொர்வம்.

கெறுவம் = கெறு, கறுவம், ஆங்காரம்.

கோரணி = ஆசியம், ஒரு நோய், ஓர் வியாதி, கேலிக் கூத்து, கோளாறு, சட்டை, திமிர்வாதம், செய்கைச் சித்திரம், முகங்கோட்டுகை, முணுமுணுப்பு.

கோறணி = குண்டணி, கோரணி.

கோரிக்கை = விருப்பம், வேண்டுகோள், மன்றாட்டம்.

கோறிக்கை = நினைவு.

கோருதல் = நினைத்தல், விரும்புதல், வேண்டுதல்.

கோறுதல் = கொல்லுதல்.

கோரை = ஓர் புல், ஓர் கிழங்கு.

கோறை = குறை, துளை, குவளை, பழுது, பொந்து, துவாரம், சிராய்த்தகாயம்.

சருவம் = அனைத்தும், எல்லாம், சட்டுவம், சர்வம், வாயு கண்ட பாத்திரம், வெண்கலம் பித்தளை முதலிய லோகங்களால் செய்யும் பாத்திரம்.

சறுவம் = சமஸ்தம்.

சாரல் = தூறல், கிட்டல், சாய்தல், சாருதல், தூவானம், மருதயாழிசை, காந்தாரப் பண், மருதயாழ்த்திறம், மலைச்சாரல், மலைப்பக்கம்.

சாறல் = சாறுதல், குளிர் காற்று.

சாரு = கிளி, அழகு, கிள்ளை.

சாறு = கள், குலை, பூசை, ஆணம், சாரம், கொத்து, ரசம், திருவிழா, விவாகம், இலை முதலியவற்றின் சாறு, சாறென்னேவல், மரத்தில் வடியுஞ் சாறு, விழா.

சாருதல் = சாய்தல், அடுத்துக் கொள்ளுதல்.

சாறுதல் = சரிதல், வடிதல், நழுவுதல், சறுக்குதல், வழுக்குதல், களங்கூட்டுதல், சறுகக் கொத்துதல்.

சிரத்தல் = அழித்தல், ஒலித்தல், எழுத்திலாவோசை.

சிறத்தல்= அருமை, சிறப்பு, சிறப்பாதல், திறப்படல், மிகுதல், மேன்மைப் படல்.

சிரை = குரங்கு, நரம்பு, சிரையென்னேவல்.

சிறை = அணை, அடிமை, இடம், இறகு, காமம், காவல், தடை, மதில், பக்கம், அடிமையானவள், அடிமைத்தனம், அழகுள்ளவள், கட்டுப்பாடு, காவலில் அடைக்கை, சிறைச்சாலை, நீர்க்கறை, விபசாரி.

சுரண்டல் = கவருதல், சீண்டுதல், சுரண்டுதல், தூண்டுதல், விபசாரஞ் செய்யல்.

சுறண்டல் = கவர்தல், சருவுதல், சுறண்டுதல், தூண்டிவிடுதல், புருண்டுதல்.



சுருக்கு = அக்கரை, உருவுதடம், உலோபம், கட்டு, கண்ணி, குழைச்சு, சங்கிரகம், சுருக்கம், சுருக்கென்னேவல், சுருங்கப் பிடித்துக் கட்டியது, சுருங்குகை, நெய்த்துடுப்பு, மடிப்பு, விரைவு.

சுறுக்கு = கதி, கடுமை, காரம், கூர்மை, விரைவு, வேகம், ஆத்திரம், சுருசுருப்பு, விலையேற்றம், விலையின் பிரியம்.

சுருசுருப்பு = ஊக்கம், ஊடுருவு, சுருசுருத்தல், சுருசுரெனல், மொழிக் குறிப்பு, விரைவுக் குறிப்பு.

சுறுசுறுப்பு = ஊக்கம், சாக்கிரதை, சுறுசுறுத்தல், தீவரம், தீவரிப்பு, விரைவு, வேகம்.

சுருதி = அசரீரிவாக்கு, இசை, ஒலி, காது, சுதி, சுரம், நூல், புகழ், மந்திரம், மங்கலச்சொல், வதந்தி, வேதம்.

சுறுதி = சுறுசுறுப்பு, தீவரம்.

சூரல் = சுகிர்தல், சுழித்தடிக்கை, சூர்தல், சூரை, பிரம்பு.

சூறல்= குடைதல், சூரைப்பூ, தோண்டல், பிரம்பு.

சூரை = ஓர்செடி, ஓர்பயிர், ஓர் மீன், கருஞ்சூரை, கள், தூதுளை, தூதுளைக்கொடி,

நெற்றிப்புல், மணி பிடியாப் பயிர்.

சூறை = ஆறலைத்தல், கடல் மீன்வகை, கழுத்தின் பின் குழி, கொள்ளை, சல்லடம், சுழல் காற்று.

சூரன் = ஓரசுரன், கரடி, கிருஷ்ணபகவானின் பாட்டன், கோழி, கௌரிபாஷாணம், சிங்கம், சூரபன்மன், சூரியன், தீ, நவச்சாரம், நாய், புலவன், வீரன்.

சூறன் = மூஞ்சூறு.

செரித்தல் = கோபத்தையடக்கல், சமித்தல், சீரணித்தல், நிலையாகல், பெறுதல்.

செறித்தல்=அடகு, அடைத்தல், அழித்தல், இறுக்கல், காத்தல், கொல்லல், சேர்த்தல், திரட்டுதல், திணித்தல், நெரித்தல், நெருக்கல், பதித்தல், பத்திரமாகவைத்தல், பாதீடு, பெய்தல், மூழ்கல், மூழ்கச் செய்தல், வைத்தல்.

செரு = ஊடல், சண்டை, போர், யுத்தம்.

செறு = குளம், சிறுவயல், செறுவென்னேவல், பாத்தி, வயல்.

செருத்தல் = எருமை-பசு இவற்றின் மடி.

செறுத்தல் = அடக்கல், அடைத்தல், கொல்லல், கோபித்தல், செறுதல், தடுத்தல், தூக்குதல், தூர்த்தல், துடருதல், நெருக்குதல், வெல்லுதல், வெறுத்தல்.

செருநர் = பகைவர், படைவீரர், யுத்தவீரர்.

செறுநர் = செறுவர், செறுவார், பகைவர்.

செருப்பு = காலுடுதோல், பாதரட்சை.

செறுப்பு = கட்டுப்பாடு, கொலை, செறிதல், செற்றல், நெருக்கம்.

சேரல் = கிட்டல், கொழியலரிசி, சேரன்.

சேறல் = எழுச்சி, செல்லல், நடத்தல், போதல்,

சொரிதல் = உதிர்தல், கொட்டுதல், சிந்துதல், சுழலுதல், பொழிதல், மிக வீழ்தல்.

சொறிதல் = அரித்தல், கெஞ்சிக் கேட்டல், தினவு நீங்கத் தேய்த்தல், பறண்டுதல், பிறுண்டல்.

சொரிவு = ஈவு, உதிர்வு, தாராளம், பொழிவு.

சொறிவு = தினவு.

தரி = தரிப்பு, தரியென்னேவல்.

தறி=கட்டை, கட்டுத்தரி,

கோடரி, தறியென்னேவல், தூண், நெய்வார்க்கருவி, நெய்வார்தறி, பறைக்கம்பு, முளை, வெட்டு.

தரித்தல் = அணிதல், உள்ளத்தமைத்தல், தாமதித்தல், நிற்றல், நிறுத்தல், பற்றல், சகித்தல், தங்கல், தாங்குதல்.

தறித்தல் = துண்டித்தல், நறுக்குதல், வெட்டல்.

தரை = ஆணித்தலை, கருப்பாசயம், நரம்பு, பூமி.

தறை = ஆணியின்றலை, தரை, தறையென்னேவல்.

தாரு = தேவதாரு, பித்தளை, மரக்கிளை, மரக்கொம்பு, மரப்பொது.

தாறு = அங்குசம், அழகானது, அளவு, அற்பம், இருப்பு முள், கமுகு வாழை முதலியவற்றின் குலை, கீல், நெய்வார்தறி, பரிக்கோல், பின்கச்சுக்கட்டு, முட்கோல், விற்குதை.

திரம் = உரம், உறுதி, தகரைச் செடி, நிலை, பலம், பெலன், முத்தி, மாறுமை.

திறம் = அதிகம், அரையென்னுமோரிலக்கம், இடம், உச்சிதம், உடம்பு, உறுதி, உபாயம், காரணம், குணம்,

குலம், கூட்டம், கூறுபாடு, கோட்பாடு, சார்பு, சுற்றம், செய்தி, திறமை, பாக்கியம், பாதி, மருத்துவம், மருத்துவத்தொழில், மிகுதி, வகை, வரலாறு, வழிபாடு, ஒழுக்கம், கற்பு, இயல்பு, சாமர்த்தியம், தத்துவம், தன்மை, திறன், குறை, நரம்புள்ள வீணை, நிலைபேறு, நேர்மை, பக்கம், மேன்மை, விஷயம், வலி, வலிமை, ஐசுவரியம்.

திரல் = காட்டாமணக்கு.

திறல் = உபாயம், ஒளி, திறம், தைரியம், பகை, போர், வலி, வெற்றி.

திராணி = சத்தி, சத்துவம், தகுதி, தத்துவம், திராணிக்கம், திராணிக்கை, பலம்.

திருணி = திராணி.

திரை = அலை, சுருங்கல், திரைச்சீலை, பஞ்சுச்சுருள், புனற்றிரை, (78-ம். ப. பார்).

திறை = அரசிறை, கப்பம்.

துரட்டு = துறட்டு.

துறட்டு = அபாயம், சிக்கல், சிறு மரவகை, சுறட்டு, தொந்தரை, முள்மரவகை.

துரத்தல் = அகற்றல், எறிதல், ஓட்டுதல், செலுத்தல், துடர்தல், தொடர்தல்,

தொண்டைப் புகைச்சல்.

துறத்தல் = இல்லறத்தை விட்டுப் பிரிதல், கைவிடுதல், திறத்தல், துறவு, நீக்கல், நீங்கல், வெறுத்தல்.

துரப்பு = துரத்துதல், முடுக்குதல்.

துறப்பு = துறவு, திறவுகோல், பூட்டு, விடுகை.

துரவு = கிணறு, தூது, மணற்கேணி.

துறவு = இல்லறநீங்கி நிற்றல், விடுதல்.

துரு = இருப்புக்கறை, உபாயம், களிம்பு, கறை, பொன்.

துறு = உண்ணுகை, உணவு, கூட்டம், செம்பூரான், செம்பூரான் கல், துறுவென்னேவல், நெருக்கம்.

துருக்கல் = கிச்சுக்கிட்டம், செம்புரைக்கல், துருக்குதல்.

துறுக்கல் = செறுமுதல், திணித்தல், துருக்கல், துறுக்குதல்.

துருவல் = ஆராய்தல், கடைதல், துருவுதல், துளைத்தல், தேடுதல், பிருண்டுதல்.

துறுவல் = உண்டல், உண்ணல், கிழித்தல், தின்றல், தின்னல், துறுவுதல், நமைத்தல், நுகர்ச்சி, நெருங்குதல், புசித்தல், பொசித்தல், மொசித்தல்.

துருவு = துருவல், துருவென்னேவல், துளை, துருவுகை, தேடுகை.

துறுவு = உணவு, துறு, நெருக்கம்.

துரை = அதிகாரி, சீமான், சுமை, தலைவன், மிகுதிப்பாடு, மேன்மகன்.

துறை = ஆறு, இடம், இறங்குதுறை, உபாயம், எல்லை, ஒழுங்கு, கடற்றுறை, கலித்துறை, காரியம், தங்குமிடம், நியாயம், நியாயவழி, நீர்த்துறை, நூல், பகுதி, பாவினத்தொன்று, வரலாறு, வழி.

தூரல் = துன்பம், தூருதல், நிறைகை, மறைதல், வருத்தம்.

தூறல் = சிறுமழை, பழிசொல்லல், மழைத்துளி, மழை பெய்தல்.

தூரு = அடி, சேறு, தூர், பாத்திரத்தினடி, வண்டல், வேரு, வேர்.

தூறு = இறும்பு, குறுங்காடு, குவியல், கூட்டம், சிலும்பல், சிறுசெடி, சிறுபற்றை, சுடுகாடு, திராய், தீங்கு, தூறென்னேவல், பழிச்சொல், பற்றைக் காடு, புதர், மஞ்சள்.

தூருதல் = மலங் கழித்தல், மேவப்படுதல், வெளியடைதல்.

தூறுதல் = கிளைத்தல், சடை பற்றல், சிதறுதல், செய்தி பாத்தல், தூறல், தூறுபடுதல், நிந்தித்தல், பழிசொல்லல்.

தெரித்தல் = எழுதல், காலங்கழித்தல், குறிப்பிடுதல், கொழித்தல், சொல்லல், பங்கிடுதல், மாறுபடுதல், விளக்குதல், வெளிப்படுதல்.

தெறித்தல் = அட்டாதுட்டி பண்ணல், அதைத்தல், அறுதல், குலைதல், சிதறுதல், சிந்தல், சுண்டுதல், தவறுதல், தாக்கப்பட்டு துள்ளி விழுதல், துள்ளுதல், தெறிக்குதல், நீங்குதல், பாய்தல், பிதுங்குதல், பிளத்தல், முரிதல், முறித்தல், முற்றுதல், வெளிப்படுதல்.

தெரிப்பு = அறிவிப்பு, ஆராய்வு, எழுதுதல், கொழிப்பு, சீட்டு, சொல்லுதல், பிரிப்பு.

தெறிப்பு = அதைப்பு, உதைந்து மீள்கை, கடைப்பூட்டு, சிந்துகை, சிந்துதல், துள்ளுதல், சுண்டுகை, முறிகை, முரிவு.

தேரல் = தேன்.

தேறல் = கட்டெளிவு, கள், சாறு, சாரம், தங்கல், துணிதல், தெளிதல், தேறுதல், தெளிவு, தேன், நிச்சயம்.

தேரலர் = அறிவீனர், தேரார், பகைவர், மதியீனர்.

தேறலர் = அறியாதார், தெரியப்படாதார், தேறலார், தேரூர், பகைவர்.

தேரார் = கல்லாதவர், கீழ்மக்கள், தேரலர், பகைவர், மதியீனர்.

தேரூர் = அறிவிலார், அறிவிலோர், பகைவர்.

தேரை = இட்டமான வீகை, தவளை, தவளையினோர் பேதம், தூண்டிலுணவு, தேங்காய் நோட்டவகை.

தேறை = ஓர்மீன், தேறகம், தேறை மீன்.

நருக்கு = குட்டுகை, நருக்குதல்.

நறுக்கு = ஊதுகுழலின் நாக்கு, ஓலைச்சீட்டு, ஓலையுறுதி, சீட்டு, துண்டு, துண்டித்தல், நாகசுரத்தின் நாக்கு, நறுக்கென்னேவல்.

நருக்குதல் = அடித்தல், குட்டுதல், கொல்லுதல், துண்டாக்குதல், நொருக்குதல்.

நறுக்குதல் = துண்டித்தல்,

நொறுக்குதல், வெட்டுதல்.

நருமுதல் = துண்டாக்கல், நரும்புதல், பல்லு நரும்புதல், பல்லாற் கடித்தல்.

நறுமுதல் = நரும்புதல், நறும்புதல், பல்லைக் கடித்தல், பற்கடித்தல்.

நரை = இடபம், சாமரை, நாரைப்புள், வெண்மை, (78-ம் ப. பார்க்க).

நறை = கள், குற்றம், தேன், நறும்புகை, வாசனை.

நாரி = இடை, ஓர் பண், கள், சேனை, தேன், நன்னாரி, நாணி, பன்னாடை, பார்வதி, பெண், யாழ்நரம்பு, வாசனை, வில்லின் நாண்.

நாறி = கற்றாழை, கொடி வகை, நன்னாரி.

நிரத்தல் = கலத்தல், கூடியொழுகுதல், சமாதானப்படுத்தல், நிரம்புதல், நிறைதல், நெருங்கல், பரத்தல்.

நிறத்தல் = சீர்படல், சோபித்தல், நிறங்கொள்ளுதல், நிறம் முற்றுதல், பயனளித்தல்.

நிரப்பு = குறைபாடு, சமதளம், சோம்பு, தரித்திரம், நிரப்பென்னேவல், நிறைகுடத்தைச் சூழப்போடும் நெல், நிறை, நாழி, நிறைவு, மிடிமை.

நிறப்பு = நிறத்தல்.

நிருத்தம் = கலைஞான மறுபத்து நான்கினொன்று, கூத்து, பதம் பிரித்தல், பற்றின்மை, வேதாகமாறிலொன்று, வேதவியார்த்தி.

நிறுத்தம் = சாயாமல் நிமிர்ந்து நிற்றல், நிறுத்துகை, நிறுத்தி வாசிக்கை.

நிருபூசல் = மும்மரிப்பு.

நிறுபூசல் = நிருபூசல், மும்முரம்.

நிருவாகம் = உண்மை, உறுதி, சகிக்கை, சீர், செவ்வை, நிலைமை, நிர்வாகம், பராமரிப்பு, பொறுப்பு, முடிவு, மேற்பார்வை.

நிறுவாகம் = நிருவாகம்.

நிருவாணம் = அம்மணம், ஆடையின்மை, கலையின்மை, தன்மை, நிர்வாணம், மோக்கம்.

நிறுவாணம் = நிருவாணம், நிர்வாணம்.

நிருவிடம் = ஓர் மருந்து, நிறுவிடம், நிருவிஷம், நிர்விஷம், மருந்து வகை.

நிறுவிடம் = துன்மார்க்கன், நிருவிடம், நிறுவிஷம், பூடுங்கை, விஷமற்றது.

நிரை = ஒழுங்கு, (78-ம். ப. பார்க்க).

நிறை = அழிவின்மை, அறிவு, ஆசை, எடை, ஏகாக்கிரசித்தம், கற்பு, நிச்சயம், நிறுத்துகை, நிறுத்தலளவை, நீதி, பிரதிஞ்ஞை, பிறரறியாமை, மறை, மனவடக்கம், மாட்சிமை, வரையறை, வலி, தராசு, துலாராசி, தைரியம், நிறைவு, நீர்ச்சால், நூறு பலம், பாரம், மனவுறுதி, மிகுதி, சால்.

நிரைச்சல் = இரவல், ஓர் விளையாட்டு, படையின் முன்னணி, படைவகுப்பு, மறைப்பு.

நிறைச்சல் = நிறைவு, பூரணம், பூர்ணம், மாட்சிமை.

நிரைதல் = ஒழுங்கு, திரலாதல், நிரப்புதல், நிரையாக்கல், நிரவுதல், முடைதல், முறைப்படுத்தல், வரிசையாதல்.

நிறைதல் = திருத்தியாதல், நிரம்புதல், பூரணப்படுதல், பெருகுதல், மிகுதியாதல், வியாபித்திருத்தல்.

நிரைத்தல் = ஒழுங்காய் நிறுத்தல், ஒலித்தல், சபைகூட்டுதல், சேர்த்தல், திரளுதல், தொடர்ந்து வருதல், நிறைவேற்றுதல், நிரப்புதல், பரப்புதல், வியாபாரப் பொருளை யிலாபத்துக்குப் பலரிடத்துங் கொடுத்தல்.

நிறைத்தல் = உடைத்தல், கருவமாயிருத்தல், குறும்பு பண்ணுதல், திணித்தல், துள்ளி விழுதல், தெறித்தல், நிரம்பச்செய்தல், நிறையச்செய்தல், நிறைப்பு, பரவச்செய்தல், விரலாற் சுண்டுதல், விரலாலுந்துதல்.

நீராடுதல் = ஸ்நானம் பண்ணல், நீர் விளையாடல், நீராடல்.

நீறுடுதல் = விபூதியுந் தூளனமாய்ப் பூசுதல், பொடிபடுத்தல்.

நூரல் = அவிதல், ஆறல், பதனழிதல்.

நூறல் = அழித்தல், நசுக்குதல், நூறுதல்.

நெரி = சீலையின் கொய்சகம், சேலையின் முரிப்பு, சொரசொரப்பு, நெரியென்னேவல், புண்புறப்பாடு முதலியவற்றால் கைகாற் சந்துகளில் உண்டாகும் புடைப்பு, மடிப்பு, வியாதிவகை, நெரிவு.

நெறி = அறல், ஆணை, ஒழுங்கு, முடக்கம், முறை, கண்மண்டைக்குழி, குணம், சுளுக்கு, செவ்வை, நீதி, நீதிமார்க்கம், புறவிதழொடிக்கை, யதார்த்தம்,

வரிசை, வழி, வழி நெறிக்கடி, வாழைப்பட்டையினடி, விதம்.

நெரித்தல் = குவித்தல், சாமார்த்தியமாய் நடத்துதல், நசுக்குதல், நருக்குதல், நிமிட்டல், நிமிண்டல், நிலைகெடச் செய்தல், நெருங்குதல், நொறுக்குதல், வருத்தல்.

நெறித்தல் = கோபத்தால் புருவத்தை வளைத்தல், சிலிர்த்தல், செவ்வேநிற்றல், நிமிர்த்துதல், நெளித்தல், மயிர் குழலுதல், முறிப்புக் கொள்ளல், முறுக்கலாயிருத்தல்.

நெரிப்பு = உடைதல், ஓடல், சாய்தல், நசிதல், நெரிதல், நெரிதரல், நொருங்குதல்.

நெறிப்பு = அகங்கரிக்கை, சிலிர்ப்பு, நிமிர்ந்திருக்கை, நெறித்தல், முரிப்பு.

நெருமுதல் = துண்டாக்கல், நருமுதல், நரும்புதல், பல்லு நரும்புதல், பல்லைக் கடித்தல்.

நெறுமுதல் = நெருமுதல்.

நொருக்கு = அடி, நெரிவு, நெருக்கென்னேவல், முரிவு.

நொறுக்கு = அடிக்கை, நருக்கு, நன்றுயடிக்கை, பொடியாக்குகை.

நொருக்குதல் = அடித்தல், நருக்குதல், நெரித்தல்.

நொறுக்குதல் = இரத்த காயம் பண்ணுதல், நருக்குதல், நையப் புடைத்தல், பொடியாக்கல், மிகுதியாயுண்ணுதல்.

நொருங்குதல் = துக்கப்படல், நருங்குதல், நெரிதல், பொடியாக்குதல், முரிதல்.

நொறுங்குதல் = நருங்குதல், நொய்தாதல், பின்னிருங்குதல், பொடியாதல்.

பரண் = அட்டாலை, இதணம், இதண், கழுது, காவற்பரண், படகம், பணவைமேற்றட்டு, மச்சு.

பறண் = பரண்.

பரத்தல் = பரம்புதல், பரவுதல், மிகுதியாதல், விருத்தியாதல்.

பறத்தல் = அவசரம் பண்ணல், கிளர்தல், தூசி முதலிய கிளம்புதல், விரைவாயோடல்.

பரதி = நாடகி.

பறதி = அவசரம், பறத்தல், பதற்றம்.

பரப்பு = அகலம், அளவு, இடை விரிவு, உலகம், ஒரு நிலவளவுப் பிரமாணம்,

கடல், சப்பிரமஞ்சம், தொகுதி, படுக்கை,

பரப்பென்னேவல், பரவைக் கடல், பரப்பாசி, மிகுதி, முகடு, மேற்பரப்பு, விசாலம், வியாபகம், விரிவு, வீதி.

பறப்பு = அவசரம், கவலை, பறத்தல், பறதி.

பரம்பு = இடவிரிவு, கழனி திருத்தும் பலகை, பரம் பென்னேவல், மூங்கிற்பாய், வரப்பு, வரம்பு, விசாலம்.

பறம்பு = குன்று, பாரியின் நாடு, பாரியென்னும் வள்ளலுடைய மலை, மலை, முலை.

பரவை = இலக்குமிக் கூத்து, உப்பு, சுந்தரர் மனைவி, கடல், திடல், தேங்கி நிற்கும் நீர், நீர்ப்பரப்பு, பரத்தல், பரப்பு, பரவிநிற்கும் நீர், பிரபலம், மதில்.

பறவை = அம்மைவகை, அவிட்டநாள், இறகு, ஒரு நோய், குக்குடசர்ப்பம், சிறகு, சிறகுள்ளன, பருந்து, பறப்பு, பறத்தல், புள், வண்டு.

பரி = குதிரை (72-ம் பக்கம் பார்க்க).

பறி = இறக்கிற பாரம், உடம்பு, பனையோலைப் பாய், பறித்தல், பொன், மீன்பிடிக்கும் கருவி.

பரிதல் = அஞ்சுதல், அழித்தல், அழிதல், அளித்தல், அறுத்தல், அறுதல், அன்பு, அன்போடுபேசல், இரங்கல், உதிர்த்தல், ஒடிதல், ஒழுகல், ஓடுதல், கடத்தல், காதல் கொள்ளுதல், தறித்தல், நீங்குதல், பகுத்தறிதல், பங்கிடல், பரிந்துபேசுதல், பற்றுவைத்தல், வருந்திக் காத்தல், வருந்துதல், வாங்கிக்கொள்ளுதல், வெட்டுதல், ஒளியுடன் வெளிப்படுதல், ஓடிப்போதல், உண்டாதல், சேகரிக்கப்படுதல், தூரநிலையாதல், தணிதல், தீர்மானப்படா திருத்தல், முன்செல்லுதல்.

பறிதல் = இல்லாமற் போதல், எய்யப்படுதல், ஒழுகுதல், ஓடிப்போதல், கடந்தோடுதல், கட்டவிழ்தல், தப்பிப்போதல், நிலைபெயர்தல், நீங்குதல், பறியல், பறிகுதல், பெயர்ந்து வழுவுதல், போதல், முற்செல்லுதல், வெளிப்படல்.

பரித்தல் = அறுத்தல், அடக்குதல், ஏந்துதல், ஓடுதல், காத்தல், சுமத்தல், சூழ்தல், தரித்தல், தாங்குதல், தாபரித்தல், பரிப்பு.

பறித்தல் = அழித்தல், இறக்குதல், கொய்தல், சாய்த்

தல், தோண்டுதல், நீக்குதல், பறிப்பு, பறிக்குதல், பாரமிறக்குதல், பிடுங்குதல், வலாற்காரமாய் கவர்தல்.

பருவதம் = ஓர்மரம், ஓர் மீன், பர்வதம்.

பறுவதம் = பருப்பதம், மலை.

பரை = ஓர் அளவு, கூராயுதம், பார்வதி (78-ம் ப. பார்க்க)

பறை = இறகு, ஒரு முகத்தலளவை, ஒரு பிரபந்தம், ஓர் அளவுக் கருவி, ஓர் சாதி, ஒழுங்குபடுத்துதல், குகை, சமபங்கிட்டணிதல், சொல், நிரத்தல், பட்டம், பறையோசை, பறவை, போதியதாதல், முரசு, வட்டம், வாச்சியம்.

பாரு = சூரியன், தீ, மருந்து.

பாறு = கழுகு, கேடு, பருந்து, பாறென்னேவல், மரக்கலம்.

பாரை = இருப்புலக்கை, ஓர் மீன், கடப்பாரை (78-ம் ப. பார்க்க)

பாறை = கற்பாறை முதலியன, திட்டை.

பிர = தோற்றம், மிகுதி, மேன்மை, விரைவு இவைகளைக் காட்டு முபசருக்கம்.

பிற = அசைச்சொல், பிறவென்னேவல், மறு, வேறு.

பிரகரம் = அடித்தல், உதவி, ஒரு வாசனைமரம், குவியல், கொல்லுதல், சங்கை, பூஞ்செண்டு, மாணிக்கக் குற்றத்திலொன்று, வளமை.

பிறகரம் = காவல், சாமம்.

பிரகரித்தல் = சங்கரித்தல்.

பிறகரித்தல் = காத்தல், சாமங்காத்தல்.

பிரத்தல் = எழுத்திலா ஒலி.

பிறத்தல் = உண்டாதல், உற்பவித்தல், சனனமாதல், தோன்றுதல், பிறக்குதல், வெளிவரல்.

பிரந்தை = சமூகம்.

பிறந்தை = சுபாவம், துன்பம், பாவம், பிறப்பு, பிறந்தகம்.

பிரதாரம் = கடத்தல்.

பிறதாரம் = பிறர்மனை.

பிரதிக்கினை = அத்தாட்சி, அறிக்கையிடுகை, ஆணை, உத்தேசித்த விஷயம், சம்மதி, சபதம், தீர்மானம், நேர்த்திக்கடன், வாக்குத்தத்தம், வேண்டியது.

பிறதிக்கினை = பிரதிக்கினை.

பிரப்பு = ஒரு கலத்திற் பல்லுணவின் பரப்பு, பேருண்டி.

பிறப்பு = அச்சம், உற்பத்தி, சகோதரம், சாதி, துவக்கம்,

தோற்றம், நெருக்கம், பயம்.

பிரலாபம் = அசைத் திசைத் திசைத்தல், ஒரு சன்னி, சம்பாஷணை, துக்கம், நாக்குளறுதல், பயனில் சொல், பிதற்றல் மொழி, புலம்புகை.

பிறலாபம் = பிரலாபம்.

பிரை = அரைப்பங்கு, உறைமோர், தொழிற்சாலை, பயன், பாதி.

பிறை = இளஞ்சந்திரன், சந்திரப்பிரவை, பிறைக்கை, மகளிர் தலையணி வகை.

பிரிதல் = அகலல், கட்டுவிடல், குலைதல், கூறுபடல், கூறுபாடாதல், நீங்கல், போகல், வேறுபடுதல்.

பிறிதல் = நீங்குதல், பங்குபடுதல், வேறுபடல்.

பிரித்தல் = கட்டவிழ்த்தல், குலைத்தல், கூறுசெய்தல், நீக்கல், பங்கிடுதல், படுத்தல், முறுக்கவிழ்த்தல், வருத்தல்.

பிறித்தல் = பங்குபடுத்தல், வேறுபடுத்தல்.

பிரிப்பு = குலைப்பு, பகுப்பு, பிரித்தல், பிரிவு, வேறுபாடு.

பிறிப்பு = பிரிப்பு.

பிரியம் = அன்பு, ஆசை, உவகை, பட்சம், பண்டங்களின் பெறலருமை, விருப்பம், விரும்பியபொருள்.

பிறியம் = பிரியம்.

பிரிவு = அவிழ்க்கை, ஒற்றுமையின்மை, பாகம், பிரிகை, பிரிதல், வெறுப்பு, வேற்றுமை, வேறுபாடு.

பிறிவு = பிரிவு.

பிரீதி = இரதி, உருக்கம், உவகை, உவப்பு, நித்தியயோகத்தொன்று: அது பிரியம், புலத்தியன் மனைவியாகிய ஹவிர்புக்கு (என்) பெயர், பட்சம்.

பிறீதி = பிரீதி.

பீரு = அச்சமுள்ளோன், புருவம், புலி, வெள்ளாடு.

பீறு = கிழிவு, குதம், கூறு, பீறென்னேவல்.

புரம் = இராஜதானி, உடல், ஊர், தோல், நகரம், புரன், மருதநிலத்தூர், முன், மேன்மாடம்.

புறம் = இடம், ஏழனுருபு, சுற்றுப்பக்கம், திசை, பட்சம், பின்புறம், புறன், புறத்தி, புறம்பு, மதில், முதுகு, மெய், வீரம், வெளி.

பெருக்கல் = அதிகப்படுத்தல், எண்கூட்டித் தாக்கல், சீத்தல், நிறைத்தல், பருத்தல், பெருக்கு, பெருக்குதல், மிகுவித்தல், விசாலித்தல்.

பேறுக்கல் = தாங்குதல், பெறுக்குதல், பொறுக்கல், பொறுக்குதல்.

பேருத்தல் = அதிகப்படல், பருமையாதல்.

பேறுத்தல் = பெறுவித்தல்.

பேரு = சமுத்திரம், சூரியன், தீ, பொன்மலை.

பேறு = இலாபம், ஒன்று, கொடை, சந்தானம், செல்வம், தகுதி, நல்லூழ் பெறுதல், பலன், வரம், வாய்ப்பு.

பொரி = நெல் முதலியவற்றின் பொரி, யானைக்காடு, பொருக்கு, வெண்காரம்.

பொறி = அடையாளப், அறிவு, அனற்பொறி, இயந்திரம், இலக்குமி, செல்வம், தேமல், தோணி, புள்ளி, பொலிவு, முத்திரை, விரலிறை.

பொரிதல் = எரிச்சற்படுதல், தீதல், பொரியாதல், பொருக்குவடித்தல்.

பொறிதல் = கலைதல், சரிதல், சறுக்குதல், பறிதல், விழல்.

பொரித்தல் = அலப்பல், குஞ்சு பிறப்பித்தல், பொரியச்செய்தல், வறுத்தல்

பொறித்தல் = எழுதுதல், சித்திரமெழுதல், பறித்தல், பொறியச்செய்தல், பொறிப்பு, வரைதல்.

பொரிவு = சிலிர்ப்பு.

பொறிவு = சாய்ந்த பதிவு, தொங்குபறிவு, தொழிற்பெயர் விகுதி, பொறிதல்.

பொருக்கு = செதிள், தகட்டு வடிவாய் வெடிக்கும் வண்டல்.

பொறுக்கு = தெரிநிலை வினைப்பகுதி, பெறுக்கு, பொறுக்கென்னேவல்.

பொருத்தல் = அமைத்தல், பொருத்துதல், பொருந்தச்செய்தல்.

பொறுத்தல் = இணங்கியிருத்தல், சகித்தல், சாந்தமாயிருத்தல், சுமத்தல், தரித்தல், தாங்குதல், பொறுமை, மன்னித்தல்.

பொருப்பு = கொல்லிமலை.

பொறுப்பு = சென்மானம், தகுதி, பாரம், பிரதானம், பொறுத்தல், பொறுமை.

மரத்தல் = பிரமித்தல், மதமதத்தல், விறைத்தல்.

மறத்தல் = அசட்டை பண்ணல், ஞாபகத்தவறு, பொச்சாப்பு, மறதி, விட்டுவிடல்

மரம் = விருட்சம், விருக்கம், வெட்டுமரம்.

மறம் = ஆண்மை, கெடுதி,

கொலை, கொடுமை, கோபம், கோவம், சண்டை, சினம், நமன், பாவம், பிணக்கு, பிணவலி, மாறுபாடு, வலி, வீரம்.

மரித்தல் = சாதல், ஸ்மரித்தல், நினைத்தல்.

மறித்தல் = காவற்படுத்தல், தடுத்தல், திருப்புதல், நிறுத்தல்.

மரிப்பு=சா, சாதல், நினைத்தல்.

மறிப்பு = தடுப்பு, திருப்பு.

மரு = ஓர் பரிமளப் பூடு, வாசனை, வனம்.

மறு = வேறு, மச்சம், மாசு, குற்றம்.

மருகல் = ஓரூர்.

மறுகல் = மறுகுதல், சுழலல், புரளுதல், மனங்குழம்புதல், வியாதி திரும்பல், சுழலாதேகொள்.

மருக்கம் = காற்று, குரங்கு, சமீபம், சரீரம், மருக்கொழுந்து, மிளகு.

மறுக்கம் = இக்கட்டு, சுழற்சி, மனக்குழப்பம்

மருப்பு = இஞ்சி, மரக்கொம்பு, விலங்கின் கொம்பு.

மறுப்பு = மறுக்குதல், மறுவுழவு.

மருவல் = அணைதல், இடையிலே சேரல், கலத்தல், கிட்டல், சருவுதல், பொருந்துதல்.

மறுவல்=கஸ்தூரி, கஸ்தூரி மிருகம், மறுபடி, மறுவி.

மரை = ஓர் மிருகம், ஒருவகை மீன், தவளை, தாமரை.

மறை = அடைக்கலம், ஆகமம், இரகசியம், இரண்டாமுழவு, எதிர்மறுப்பு, ஒளிப்பிடம், கறை, கேடகம், சங்குச்சுரி, சொல், திருகுமறை, புள்ளி, மந்திரம், மறையென்னேவல், மறைவு, வேதம்.

மாரி = ஓர்பறவை, ஓர் ஒட்டுநோய், கள், சாவு, நீர், மழை, மேகம், மாரிகாலம்.

மாறி=மாறுடி, வேறுபட்டு.

மிருது=சாந்தம், நொய்மை, மந்தம், மழுங்கல், மேன்மை, நெல்லிக்காய்.

மிறுது = சமுத்திரப்பச்சை, நெல்லி.

முரி = பாலைநிலம், பாதி, தெரிநிலை வினைப்பகுதி.

முறி = அடிமை, இலை, உயர்ந்த வெண்கலம், எழுதுமுறி, ஓர் வகைப் புடைவை, தளிர், துண்டு, முறியென்னேவல்.

முரிதல்=ஒடிதல், கெடுதல், தோற்றல், பின்னப்படுதல், முரிகுதல்.

முறிதல் = திரைதல், முரிதல், ஒடிதல்.

முரித்தல் = ஒடித்தல், கெடுத்தல், தோல்வி செய்தல்.

முறித்தல் = அகைத்தல், இசித்தல், ஒசித்தல், ஒடித்தல், கோடல், முரிதல், முரித்தல்

முரிப்பு = எருத்துத்திமில், முரித்தல்.

முறிப்பு = முரிப்பு, முறிவு.

முரியல் = முரியப்பட்டது.

முறியல் = முறிதல்.

முரிவு = ஒடிவு, மடிப்பு, முறிவு, வருத்தம்.

முறிவு = முரிவு, முறிதல்.

முருக்கல் = கொல்லல், முருக்குதல், பிணங்கல்.

முறுக்கல் = கோபித்தல், திரித்தல், வலித்தல்.

முரை = ஒன்பதாம் நந்தன் மனைவி, சிவன, சந்திரகுப்தன் தாய், இவள் சூத்திரகுலத்தினள்.

முறை = ஒழுக்கம், கிரமம், உறவின்முறை, குணம், பழமை, தரம், ஓரிடைச்சொல், வரிசை, புத்தகம்.

முரண்டு = அமையாமை, இசையாமை, மாறுபாடு.

முறண்டு = முரண்டு.

முருக்கு = எலுமிச்சை, கிஞ்சுகமரம், கொலை, முருக்கமரம், முருக்கென்னேவல்.

முறுக்கு = ஓர் பணிகாரம், பிணக்கு, புரி, முறுக்கென்னேவல், வீறுப்பு.

முருக்குதல் = அழித்தல், உருக்குதல், கொல்லல்.

முறுக்குதல் = சிதைத்தல், முறுக்கல்.

வரப்பு = அணை, எல்லை, ஒழுங்கு, வயல் வறத்தல், வரம்பு.

வறப்பு = குறைவு, வற்று.

வரவு=வணக்கம், வருகை, வருமதி.

வறவு = கஞ்சி.

வரளுதல் = காய்தல், வரள்தல், வரளல், வரட்சி.

வறளுதல் = வறள்தல், வறள்வு, வறளல்.

வருமொழி = பின்வரும் வார்த்தை.

வறுமொழி = பயனிலாப் பதம், வீண்சொல்.

வரை = அளவு, எழுத்து, மலை, கரை, சிறுவரம்பு, விரலிறை, மூங்கில், வரி, விவாகம், இடம், எல்லை, கல்.

வறை = துவட்டற்கறி, வறையல், பிண்ணுக்கு.

விரகு = அழிவு, அறிவு, உச்சகம், உணர்வு, உபாயம், கதி, சமர்த்து, பண்ணிபாரம், புத்தி, விரகிதம்.

விறகு = ஓம விறகு, கறல்,

காட்டம், சமிதை.

விரல் = அங்குலி.

விறல் = பெருமை, வலிமை, வீரம், வெற்றி.

விருதா = பயனின்மை, பிழை, வீண்.

விறுதா = விருதா.

விரைத்தல் = வித்திடுதல், விதைத்தல்.

விறைத்தல் = திமிர்ப்பு, மரத்து நிற்றல், விறைப்பு.

வீராப்பு = பொருமல்.

வீறுப்பு = இறுமாப்பு, சினப்பு, விறுப்.

வேரு = அச்சம்.

வேறு = தெரிநிலை வினைப் பகுதி, வெறுமை.

வேரல் = மூங்கில், வேய்.

வேறல் = வெல்லுதல், வெற்றிகொள்ளல்.

லகர - ளகர - ழகர பேத விளக்கம்

அலகு = எண், பறவை மூக்கு, அளவு, அளவு கருவி, கொதுகு, பலகறை, மகிழம் விதை, நென்மணி, கதிர், கதுப்பு, ஆயுதம், கூர்மை, தாடை, கொடிறு, கைம்மரம், சலாக்கு, துடைப்பம், நூல் பாவினலகு, நெல், அகலம், நுளம்பு, இலட்சம் பாக்கு, பலகறை, ஆண்பனை.

அழகு = சிறப்பு, சௌந்தரியம்-சுகம்-கண்ட சருக்கரை.

அளகு = கோழி, கூகையல்லாத பறவையின் பெண், கார்திகை நட்சத்திரம்.

அவல் = தின்பண்டம், நெற்பொரியிடியல், பள்ளம், விளைநிலம், குளம்.

அவள் = பெண்.

ஆலம் = அம்புக்கூடு, ஈயம், ஆலமரம், அகலம், அலாயுதம், ஆகாசம், ஆகாயம், கருமை, புன்கமரம், பூ, துரிசு, பாம்பு, மழை, மஞ்சளும் சுண்ணும்

பும் கலந்த நீர், நஞ்சு, நீர், கடல், மழு, மரவகை, மலர், கலப்பை, மாவிலங்கு, விஷம், விடம்.

ஆழம் = ஆழ்ந்திருக்கை, அறிதற்கரியது, ஆழ்ந்த கருத்து, கடல், கம்பீரம்,

கயம், குட்டம், குண்டு, தாழ்வு, பள்ளம்.

அழிதல் = இறங்குதல், கலங்குதல், குலைதல், சிதறுதல், தோல்வியடைதல், நாசமாதல், சிதைவுறுதல், தவறுதல், நிலைகெடுதல், தோற்றல், மனம் உருகுதல், வருந்துதல், மனம் உடைதல், பெருகுதல், பரிவு கூர்தல், செலவாதல், கெடுதல், தவறல்.

அளிதல் = அறக்கனிதல், குழைதல், பிரியமாயிருத்தல், கலத்தல், உருகுதல், கனிதல்.

அழித்தல் = அசித்தல், அட்டல், அவித்தல், இருத்தல், உடற்றல், எருக்கல், கண்டித்தல், கலைத்தல், குலைத்தல், கெடுத்தல், கொல்லல், சங்கரித்தல், சதித்தல், செற்றல், துளக்கல், நகருதல், நுதுத்தல், பாழாக்கல், பறைத்தல், மிளிர்த்தல், முருக்கல், முருக்குதல், செலவழித்தல், உள்ளதை மாற்றுதல், மறப்பித்தல், தடவுதல், நீக்குதல், இல்லாமற் செய்தல்.

அளித்தல் = காத்தல், கொடுத்தல், செறித்தல், ஈனுதல், சொல்லுதல், சிருட்டித்தல், அருள் செய்தல், விருப்பமுண்டாக்குதல், சோர்வை நீக்குதல், ஈகுதல், ஈகல், ஈதல், ஈயல், ஈனல்.

அலமருதல் = அலமரல், அச்சங்கொள்ளல், இளைத்தல், கலங்கல், சுழலல், துன்பமுறல், சுழலுதல், மனஞ்சுழலுதல், அஞ்சுதல், வருந்துதல், அசைதல்.

அளமருதல் = அலமருதல், அளமரல்.

அலவு = மனத் தடுமாற்றம், அலைதல்.

அளவு = பரிமாணம், தருக்கப் பிரமாணம், தாளத்தில் மூன்று மாத்திரைக்காலம், சமயம், தன்மை, நிலவளவு, ஞானம், மட்டும், தொடங்கி, நிதானம், வரையறை.

அலவுதல் = வருந்துதல், சிந்துதல்.

அளவுதல் = கலப்புறுதல், கலத்தல், அளாவுதல்.

அலைதல் = அசைதல், ஆடுதல், திரிதல், வருந்துதல், தள்ளாடுதல், துன்பம்.

அளைதல் = அருந்துதல், தீண்டுதல், தொட்டழுக்காக்கல், புரளுதல், வருடல், குழைதல், அளைவு, துழாவுதல், கலத்தல், தழுவுதல், அனுபவித்தல், கூடியிருத்தல், அளாவுதல்.

அலேத்தல் = அசைத்தல், அலேயச் செய்தல், வருத்துதல், அடித்தல், நிலே கெடுத்தல், உருட்டுதல், அலேமோதுதல், கெடுத்தல், திரையடித்தல், நீரைக் கலக்குதல்.

அழைத்தல் = கூப்பிடுதல், வரவழைத்தல், கதறுதல், பெயரிட்டுக் கூப்பிடுதல்.

அலேவு = அலேதல், அமைவின்மை, வருத்தம், சஞ்சலம், அசைகை, அசைவு.

அளேவு = கலப்பு, குழைவு, அளேதல், வளேவு.

அல்லி = அகவிதழ், ஆம்பல், இரா, இளவேர், காயாமரம், நெய்தல், பூந்தாது, மதுரையை ஆண்ட அரசி (அருச்சினன் தீர்த்தயாத்திரைக் காலத்தில் இவளே மணம்புரிய புலந்திரனே ஈன்றவள்).

அள்ளி = வெண்ணெய்.

இழிவு=அவகீர்த்தி, ஈனம், குற்றம், இவவு, இழிபு, கேடு, தாழ்வு, நிந்தை, பள்ளம், இளிவு, தாழ்வு, இகழ்ச்சி, குறைவு, தாழ்ச்சி, தீட்டு.

இளிவு = இளிபு, இழிவு, இகழ்ச்சி, இழிதகவு, அருவருப்பு, இளிவரவு.

உல்லம் = ஓர் மீன்வகை.

உள்ளம் = மனம், ஆன்மரூபஞானம், ஆன்மா, கருத்து, புருடன், முயற்சி, ஊக்கம், விஞ்ஞானம்.

எலும்பு = முள், என்பு.

எழும்பு = உயரு, கிளம்பு.

கலம் = ஓரளவு, ஆபரணம், ஆயுதப்பொது, இரேவதி நாள், உண்கலம், மட்கலம், மரக்கலம், யாழ், பேரணிகலம், பாத்திரம், மதுரத்தொனி, குப்பி, உழுபடை, பந்தி, கலன்.

களம் = தானியமடிக்குமிடம், இடம், இருள், உள்ளம், ஒரூர், கடலுண்மிதப்புத்தரை, கழுத்து, களா, களன், களர்நிலம், கறுப்பு, நெற்களம், போர்க்களம், மனேவி, மிடறு, யாகசாலே, விடம், ஓலேபத்திரம், இன்னேசை, நஞ்சு.

ஆலல் = ஆடல், ஆரவாரித்தல், ஒலித்தல், சேருதல், மயிற்குரல், ஆசை.

ஆழல் = ஆழமுடைத்தாதல், ஆழுதல், கறையான், தாழ்தல்.

ஆளல் = ஆளுதல், ஆள்வு.

இலகல் = ஒளிசெய்தல், இலகுதல்.

இளகல் = அசைதல், ஈரித்தல், இளகுதல், அசைந்துவிழுதல், கரைதல், குழைதல், தணிதல், தளர்தல்,

நுகைதல், நெகிழ்தல், மிருது வாதல்.

இலக்கம் = இலக்கு, இலங்குதல், காணுதல், நூருயிரம், இலட்சம், எண், ஒளி, குறிப்பு, துலக்கம், பிரகாசம், எண்குறி.

இளக்கம் = இளகிய தன்மை, இளகுதல், தணிவு, நுகைவு, நெகிழ்ச்சி, தளர்ச்சி, விலைக்குறைவு, மேன்மை, இளக்காரம்.

கல்லி = ஆமை, ஊர்க் குருவி, கேலி, வேடிக்கை, மேலங்கியுறுப்பு.

கள்ளி = ஓர் மரம், திருடி, செடி வகை, இலைக் கள்ளி, சாதிக்காய் மரம், கள்ளச்சாதிப் பெண்.

குழம்பு = ஆணம், பதார்த்தம், கஞ்சி, குழம்பென்னேவல், குழைசேறு, சந்தனக் குழம்பு முதலியன, நீராளமானது, பாகு.

குளம்பு = விலங்கின் குளம்பு, குரம்.

கோல்லி = ஓர் மலை, ஓர் பண், கொல்வோன், நெருப்பு, வில்.

கோள்ளி = நெருப்புறு விறகு, எருமை நாக்கி, மகா பொறுமையும் முன் கோபமுள்ளவன்.

கோல்லை = தோட்டம், குச்சு, சோலை, புறக்கடை, பூந்தோட்டம், புழைக்கடை, புன்செய் நிலம், தரிசு, முல்லை நிலம்.

கோள்ளை = களவு, ஒரு நோய், கொள்ளையிட்ட பொருள், கொள்ளையெடுத்தல், மிகுதி, கூட்டம், தடை, விலை, பயன்.

சவலை = மெலிவு, இளமையுள்ளது, பிள்ளை, ஒருபா, மனக்குழப்பம், இளைமை.

சவளை = வங்கமணல்.

தலம் = இடம், ஆழம், இலை, உலகின் பொது, உள்ளங்கால், கருவியுறை, கலப்பு, கரடு, கீழ், குவியல், கைகொட்டல், துவாரம், நிமித்தம், பனை மரம், பாதி, பிளப்பு, பூமி, விரித்தகை, தாலம், தலன், சேத்திரம்.

தளம் = சேனை, இலை, உப்பரிகை, கப்பலின் தட்டு, கூட்டம், சாடி, சாணைப்பிடியாகு கெம்பு, சாந்து, தடிப்பு, நிலத்தின் றளம், படை, பறந்த வடிவு, பூவிதழ், வீட்டின் றளம்.

தாலம் = கூந்தற்பனை, தட்டம், அகங்கை, உண்கலம், தலம், தாலம்ப பாஷாணம், தேன், நா, பனை, பூமி, யானைச்

செவி, மடன்மா, அனுஷம், தச்சன்.

தாளம் = காலவளவு, ஓர் வாச்சியம், கலைஞானமறு பத்துநான்கினுென்று, சதி, பனை, தாளகம், தாளிசம், பொன்னரிதாரம், முத்து.

நல்ல = நேர்த்தியான, நல், நன்மையான, ஏற்ற, மிகுந்த, அதிகமான, மிக, கடுமையான.

நள்ள = சிநேகிக்க.

பலம் = ஓர் நிறை, அம்பலகு, ஆதாயம், ஆயுதநுனி, இலை, காய், கிழங்கு, கேடகம், கொழு, சாதிக்காய், சேனை, பயன், வலிமை, காய், சுரூபம், செல்வாக்கு, தாது, தொகை, நிமிஷம், நிறைகல், நெற்றி, படை, பருப்பம், பழம், பிறித்துக்கண்டபேறு, பெலன், பொன், மகளிர் சூதகம், மாதிரி, மாமிசம், வட்டத்தின் பரப்பு, வெட்பாலை, கலப்பையின் கொழு, வலி, வேகம், வன்மை, வினைப்பேறு, நிறைவகை, உறுதி, பருமன், சேராங்கொட்டை, நிறையளவினுென்று, பயன்.

பழம் = கனி, பலம், முதிர்ந்தது.

பல்லி = கெவுளி, இடம், இடையரூர், ஒருடும்பு, சிற்றூர், பலுகுக்கட்டை, பெரிய பல்லுடையவள், சிறுபிராணிவகை, பூடுவகை, கிராமத்தின் அரைக்கூறு, கற்சிலைப்புள், வெற்றிலைக் கணுவில் அரும்புங் குருத்து.

பள்ளி = சிற்றூர், அறச்சாலை, அறை, ஊர், ஓர் சாதி, கல்லூரி, தேவர், கோவில், நித்திரை, பட்பெண், பள்ளிக்கூடம், மக்கட் படுக்கை, மருதநிலத்தூர், முனிவர் வாசம், இடைச்சேரி, இடம், நகரம், சைன-பௌத்த கோயில், வேலைக்களம், சாலை, வன்னியசாதி, குறும்பர்.

புழுகு = புனுகு, நாவிப் புழுகு, அம்புக் குப்பி.

புளுகு = பொய்.

வலம் = வலி, வெற்றி, இடம், கனம், சேனை, மேல், வலப்பக்கம், வலன்.

வளம் = அழகு, செல்வம், செவ்வை, பக்கம், பதவி, பலபண்டம், மாட்சிமை, வலி, வழி, வளன், வாறு.

வெல்லம் = கரும்பின் கட்டி.

வெள்ளம் = நீர்ப்பெருக்கு, ஓரெண், கடல், மிகுதி, ஈரப், கடற்றிரை.

அண்ணம் = மேல்வாய்,

உண்ணு, கீழ்வாய்ப்புறம், அண்ணு.

அன்னம் = ஓர் பட்சி, சாப்பாடு, கவரிமா, சோறு.

எண்ண = நினைக்க, ஆலோசிக்க, உத்தேசிக்க, மதிக்க, யோசிக்க.

என்ன = வினு; உவமைச்சொல், எத்தன்மைய, யாது, யாவை என்று சொல்க.

ஒண்ணர் = கூடாதவர், பொருந்தாதார், இயலாதார், தகாதவர்.

ஒன்ணர் = பகைவர், ஒன்ணுதார்.

கணம் = கூட்டம், ஓர் நோய், ஓர் புல், காலநுட்பம், குறைவு, சிறுமை, சீரிலக்கணம், திப்பிலி, திரட்சி, தீப்பொறி, நான்கு நிமிஷம், அல்லது முப்பது கலை கொண்ட கால அளவு, நீர்த்துளி, பதினெட்டென்னும் ஓர் இலக்கம், பிசாசம், மாத்திரை வட்டம், வருக்கம், விண்மீன், விலங்கின் கூட்டம், அணு, அற்பம், கணநாதர், கணபிச்சை, சிவகணம், நட்சத்திரம்.

கனம் = மேன்மை, அகலம், இசை விகற்பம், இரசம், ஈயம், கூட்டம், கோரைக்கிழங்கு, கனத்தவடிவு, பாரசிந்தனை, சங்கை, சமமாகிய மூவெண்ணின் பெருக்கம், சீர்மை, செறிவு, நிறைவு, பருமை, பாரம், பெருமை, பொன், மிகுதி, மேகம், வட்டம், வன்மை.

காணம் = ஓரளவு, கொள், செக்கு, பொற்காசு, பொன்.

கானம் = இசைப்பாட்டு, இராகம், காடு, கீதம், குறிஞ்சி நிலம், சோலை, பாடுதல், முல்லைநிலம், வனம், வாசனை, ஊனம்பாடி.

காணல் = குறித்தல், தோற்றல், நினைத்தல், பெறுதல், வணங்கல், பார்த்தல்.

கானல் = உப்பளம், ஒலி, கடற்கரை, சோலை, கழி, காங்கை, காடு, சூரியன், கிரணம், பேய்த்தேர், வெண்டேர்.

பாணம் = அம்பு, கை, திப்பிலி, துதி, நாடக வகைப் பத்தினொன்று, பூம்பட்டு, மழைவண்ணக் குறிஞ்சி, வாணம், வியாபாரம், இராமபாணம், கணை, செடிவகை.

பானம் = ஜலவஸ்து, கள், குடித்தல், பருகுவன, குடிக்கை, அமிர்தம்.

ஆங்கில ஆசிரியன்

இதைப்போல் ஆங்கிலத்தைப் பிழையின்றி கற்பிக்கும் புத்தகம் வேறு கிடையாது. கண்களைக் கவரும் பல சித்திரப் படங்கள் நிறைந்தது. இதற்கு முன் ஆங்கிலம் கற்க வெளிப்பட்டுள்ள சில புத்தகங்களை வாங்கிப் பலநாள் படித்தும் உபாத்தியாயர் இல்லாமல் கற்பது முடியாதென கைவிட்டவர்களும் இந்நூலை வாங்கிப் படிப்பார்களானால் அவ்வுபாத்தியாயர்களில்லாமலே இரண்டொரு மாதத்திற்குள் **B P D T F G** முதலிய ஆங்கில எழுத்துக்களைத் தமிழில் உச்சரிப்புத் தோஷமின்றி படிக்கவும், பேசவும், எழுதவும், வல்லவர்களாவார்களென்பது திண்ணம். இதில் பதங்களைத் தனித்தனி எழுத்தாய்கூட்டும் வழியும், பதத்தை உச்சரிக்கவேண்டிய கிரமமும், அவைகளுக்கு உண்டாகிய கிரமமான சப்தமும், தமிழ் அர்த்தமும், பெயர்ச்சொற்கள், வினைச் சொற்கள், உரிச்சொற்கள் பண்புப் பெயர் முதலிய இலக்கண விதிகளோடும் ஆரம்பமுதலே சிறுகச் சிறுகப் போதிக்கின்றது.

400-பக்கம் கொண்ட புத்தகம் விலை ரூ. **1.**

கப்பற் கொள்ளைக்காரர்கள்

விலை ரூபா 1-4-0

அதி பயங்கரமான கடலில் கப்பற் கொள்ளைக்காரர்களால் கோடீஸ்வரரின் குமாரத்தி சிறைப்பட்டு அளப்பரிய துன்பங்களை அனுபவித்தும் கொடியவர்களுடைய பயமுறுத்தலுக்குப் பயப்படாமலும், கற்பிற்கு பங்கம் வராமலும், காப்பாற்றிக்கொள்வது அதிசயமாயிருக்கும். ஒரே தருணத்தில் இரண்டு படுகொலைகள் செய்யப்படுவது, அதற்காக சத்தியசீலர்கள் குற்றம் சாட்டப்படுவதும் முடிவில் கடவுளருளால் உண்மைக் கொலையாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை யடைவதும் ஆகிய பல நெஞ்சம் திடுக்கிடத்தகுந்த சம்பவங்களை இதில படிக்கப் பயங்கரமும் பரிதாபமும் உண்டாகும்.

பிக்டோரியல் கம்பெனி, பிராட்வே, சென்னை.

குடும்ப விநோதக் கதைகள்

1. மனைவியின் கடமை, 2. தாய் செய்த நன்றி, 3. பாத்திரமறிந்து பிச்சையிடு, 4. கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு, 5. அன்புள்ள மனைவியும் அறிவில்லாப் புருஷனும், 6. புருஷனை ஆண்டியாக்கிய மனைவி, 7. பணம் பந்தியிலே குலம் குப்பையிலே, 8. பணம் வந்தவழியே செல்லும், 9. அண்ணியின் கொடுமை, 10. நவீன நாகரீகம், 11. சித்தம் கலங்கிய சித்ராங்கி, 12. பாலாம்பாள் செய்த படுமோசம், 13. தந்தைசெய்த நன்றி, 14. புருஷனைக் கொன்ற மனைவி, 15. மனைவியைக் கொன்ற புருஷன், 16. மாமியின் கொடுமை, 17. மருமகளின் கொடுமை, 18. இரண்டு பெண்டாட்டிக்காரன் திண்டாட்டம், 19. ஆடம்பர நகையலங்காரி, 20. நகைப் பைத்தியத்தால் நாசமடைந்த கமலம், 21. திருட்டுச் சாமியாரும் குருட்டுக் கூத்தியாரும், 22. பெண் சிரித்தால் போச்சு, 23. மதம் பிடித்த மாமனார், 24. மோசம்போன மாமனார், 25. சகோதரத் துரோகி, 26. மைத்துனன் கொடுமை. ரூ. **2.**

உலக விநோதக் கதைகள்

1. உத்தம மனைவி, 2. பணம் படைத்தும் பிச்சைக்காரன், 3. பணத்திற்குச் சொந்தக்காரன், 4. பெண் பாவம் பொல்லாது, 5. பதி பக்தி, 6. பிள்ளையைக் கொன்ற தாய், 7. நாகரிக கிராம வாழ்க்கை, 8. மானங் கெட்ட மாமியார், 9. பங்களா வாசம், 10. தூக்கிலிருந்து கணவனைக் காத்த துர்க்காதேவி, 11. வருவது தானே வரும், 12. மாற்றாந் தாயின் கொடுமை, 13. கணவனின் கொடுமை, 14. நாத்தியின் கொடுமை, 15. புருஷனை மதியாத மனைவி, 16. திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை, 17. அற்பசகவாசம் பிராண சங்கடம், 18. தாயால் கெட்ட பெண், 19. தாயைப் பார்த்துப் பெண்ணைக் கொள், 20. பெண்ணின் வாழ்வைக் கெடுத்த தாய், 21. தலைவிதி யாரை விட்டது, 22. மதியில்லா மனைவி, 23. உத்தம புருஷன், 24. பணத்திமிர், 25. மோசம்போன கணவன், 26. பணம் பத்தும் செய்யும். விலை ரூ. **2.**

போட்டிப் பந்தயங்களின் விடைகளைக் கண்டுபிடிக்க

"விக்டோரியா தமிழ் அகராதி"

தயாரிக்கப்பட்டது விலை ரூபாய் **2-8-0.**

தபால் செலவோடு ரூ. **2-14-0** மணியார்டர் செய்யவும்

15,000-பதங்கள்

520-பக்கங்கள்

300-படங்கள்



அடுக்கு வரிசைகளாய் ஓரெழுத்து முதல் ஆரெழுத்து வரைக்கும் தனித்தனியாய் பதங்களின் அர்த்தத்தோடு தயாரித்திருக்கிறது.

இராஜராஜேஸ்வரி

பல துப்பறியும் நாவல்கள் இயற்றிய

ஸ்ரீமான் S. S. அருணகிரிநாதன் எழுதியது.

வஞ்சக எண்ணமுடைய அற்பர்களால் நல்லவர்கள் துன்பப் படுவதும், சத்தியத்தை சடைப்பிடித் தொழுகுவதால் முடிவில் கஷ்டங்களெல்லாம் தீர்ந்து சுகமனுபவிப்பதும் முதலிய அநேக ரகசியங்கள் இதில் காணலாம். பணக்காரனொருவன் அனாதை யாகிய ஓர் பெண்ணைக் கலியாணம் செய்துகொள்வதாக வஞ்சனை செய்து அவளை கற்பழித்ததுமன்றி, கர்ப்பவதியானதும் அவளை சாப்பாட்டிற்கு அலையவிட்டு தான் மாத்திரம் திரண்ட செல் வத்தை யனுபவித்துகொண்டு நிம்மதியாய் வேரொரு சீமாட்டி யைக்கூடி வாழ்வதும் முடிவில் இரகசியம் வெளியாகி கண்டோர் நகைக்கும்படி ஆளாவதும் முதலான இவைபோன்ற அநேக அற்புத விசித்திரங்களை இதில் காணலாம். இதன் விலை ரூ. 1-8-0

பிக்டோரியல் கம்பெனி, 137, பிராட்வே, சென்னை.